
ௐ

# வளரும் சிறுவர்க்கு வாழும் இந்து சமயம்

பாகம் - 02



உ
சிவமயம்

# வளரும் சிறுவர்க்கு

# வாழும் இந்து சமயம்

## பாகம் II

**(ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குரியது)**

*கதைகள், பாடல்கள், படங்கள் அடங்கியது*

**புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்கு உகந்தது**




தொகுப்பாசிரியர்
*வித்யாபூஷணம், சாதக சிரோமணி*
*ப. சிவானந்த சர்மா* B.A. (Hons.)
***(கோப்பாய் சிவம்)***





வெளியீடு
*சர்வானந்தமய பீடம்*
*யாழ்ப்பாணம், இலங்கை.*
**ஜனவரி 2008**

# நூல் வெளியீட்டுத் தகவல்கள்


| | |
|---|---|
| நூலின் பெயர்: | வளரும் சிறுவர்க்கு வாழும் இந்து சமயம் II |
| விடய உள்ளடக்கம் | ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரையான சிறுவர்களுக்கான சமயபாடப் புத்தகம் ( புலம்பெயர் நாடுகளில் வாழும் சிறுவர்களுக்கு உகந்தது) |
| தொகுப்பாசிரியர் | **வித்யாபூஷணம், பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A. (Hons.)** **(கோப்பாய் சிவம்)** அமைப்பாளர், சர்வானந்தமய பீடம் இணுவில் மேற்கு, சுன்னாகம், இலங்கை. தொ.பே. 0094 21 222 6004 |
| முதற்பதிப்பு | ஜனவரி 2008 |
| விலை | ரூபா. 150.00 |

## Publication Details

| | |
|---|---|
| Title: | **Valarum Siruvarkku vazhum Inthu Samayam II** A Book on Hinduism for the Children of all Faiths ( Suitable for children living in foreign Countries) |
| Author : | **Brahmasri P. Sivananda Sarma B.A. (Hons)** **(Kopay Sivam)** Sarvananthamaya Peedam Inuvil West, Chunnakam, Sri Lanka. Tel : 0094 21 222 6004 |
| First Edition | January 2008 |
| Price | Rs. 150.00 |





# இறை வணக்கம்

திருச்சிற்றம்பலம்

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் தீரு ஆலவாயான் திருநீறே.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

திருச்சிற்றம்பலம்



# என்னுரை

இந்துசமயம் உலகளாவிய வகையில் வளர்ந்து பரந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில்,

புலம்பெயர் நாடுகளிலெல்லாம் பல ஆலயங்கள் கட்டியெழுப்பப்பட்டு நமது இந்துசமய வழிபாடும், சடங்குகளும் கைக்கொள்ளப்படும் இந்த நேரத்தில்,

பல்வேறு நாடு - இனம் - மொழிகளைச் சேர்ந்தவர்கள் இந்துசமய மரபுகளைக் கண்டு வியந்து அவற்றை ஆராய்கின்ற இந்த நேரத்தில்,

அவர்களில் பலர் மிகவும் கஷ்டப்பட்டு நமது தேவபாஷையாகிய - ஆன்மீக மொழியாகிய சம்ஸ்கிருதத்தைக் கற்று, வேதம், ஆகமம், பகவத்கீதை முதலிய நமது சமய, தத்துவ நூல்களையும் சோதிட, வைத்திய நூல்களையும் படித்தறிந்து அவற்றில் காணப்படும் விஞ்ஞான அறிவியல் நுட்பங்களைக் கண்டறிந்து வியந்து பாராட்டும் இந்த நேரத்தில்,

அவ்வாறு வியந்து பாராட்டுவோரில் பலர், நமது இந்துசமயத்தைத் தழுவி நமது பண்பாடு கலை, கலாசாரங்களைக் கொண்டொழுகி எங்கள் பரம்பொருளை ஏத்தி வழிபடும் இந்த நேரத்தில்,

நம்மவர்கள் சிலர் மதம்மாறிச் செல்கிறார்கள். இன்னும் சில நம்மவர்கள் நமது சமயத்தைக் கேலி செய்கிறார்கள். இன்னும் சிலர் நமது பழக்கவழக்கங்களைக் கைவிட்டு அந்நிய நாகரிகமே சிறந்ததென எண்ணி அங்குமிங்குமாக அலைபாய்கின்றனர்.

இத்தகையோரின் சிறார்களின் நிலை என்ன? தங்கள் பாரம்பரிய நடைமுறைகளைத் தெரிந்து - புரிந்து பின்பற்றவும் முடியாமல், அந்நியப் பண்பாட்டில் முழுமையாக ஈடுபடவும் முடியாமல் தத்தளிக்கிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன?

ஏன்? என்பதுதான் இவர்களுக்குள்ள பிரச்சனை. அதாவது இளைய தலைமுறையினர் கேள்வி கேட்பவர்கள். அவர்களுக்கு விடை கூற எம்மவர்கள் பலருக்கு முடியாதுள்ளது.

முதலில் பார்த்த சிலர் போலல்லாமல் உண்மையான ஈடுபாடுடைய இந்துக்கள் பலர் கூட, முழுமையாக, நமது பாரம்பரிய மரபுகளின் உயர்சிறப்புக்களைச் சரியாக விளங்கிக் கொள்ளாத காரணத்தால் புதிய தலைமுறையினருக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க முடியாமலுள்ளனர்.

காரணம் புரியாத காரியங்கள் தவறானவையாக, அர்த்தமற்றவையாக, ஏன் மூடநம்பிக்கைகளாகக் கூடப் புதிய தலைமுறையினரால் கருதப்படுகின்றன. இந்த எண்ணம் மாற்றப்பட வேண்டும்.

பல ஆலயங்களில் கிரியைகளை நடத்துவிக்கச் செல்பவனாகவும், பல ஆலயங்களில் சமயச் சொற்பொழிவாற்றச் செல்பவனாகவும், வெளிநாடுகள் பலவற்றக்குச் சென்று அங்குள்ள சமய நிலைப்பாடுகளை அறிந்துள்ளவனாகவும், பலசந்தர்ப்பங்களில் சமயபாடத்தைப் போதிக்கும் ஆசிரியனாகவும் இன்று வெளிவந்து கொண்டிருக்கும்

பல்வேறு அபத்தமான - தெளிவற்ற - சமயநூல்கள் பலவற்றை வாசித்து மனவேதனையில் தவிப்பவனாகவும், நான் இருக்கின்ற காரணத்தால் நமக்குமுன் இருக்கும் பாரிய பிரச்சனையின் மூலவேரைக் கண்டறிந்தேன்.

நமது சமய உண்மைகள் நம்மிடையே தெளிவாக்கப்பட வேண்டும். நமது இந்துசமயம் நமது நாளாந்த வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவிலும் கலந்துள்ள ஒன்று.

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள்" ஆக இருக்கும் நமது சமயப் பாரம்பரியம் பின்னைப் புதுமைக்கும் புதுமையாக என்றும் புதிதாக நிலைபெற்றிருப்பது. அறிவியல் விஞ்ஞான ஆய்வுகளால் மெய்யாக நிரூபிக்கத்தக்கது. சநாதனதர்மம் என்ற பெயருக்கிணங்கக் கால காலமாக நிலைபெற்று வாழ்ந்து வருவது என்பதுடன் இன்னுமின்னும் நிலை நின்று வாழப்போவது என்னும் இந்த உண்மைகள் நமது அடுத்த தலைமுறையினருக்கு உணர்ததப்படவேண்டும். நமது சமயத்திலுள்ள மனிதப் பண்பாட்டு விழுமியங்கள், மாநுடநேயம் அவர்களுக்குப் புலப்படுத்தப்பட வேண்டும்.

இதன் மூலம் புதிய தலைமுறை புரியாமல் தத்தளிக்காது.

தலைகால் புரியாமல் தறிகெட்டு ஓடாது.

வன்முறைக் கலாசாரத்தால் மனங்கலங்கி நிற்காது.

சுயத்தை மறந்து அந்நியப்படமாட்டாது.

சுவாமி விவேகானந்தர் போல, 'நாம்' என்று நிமிர்ந்து நின்று மார்தட்டி நாளைய உலகை அன்போடு அரவணைத்து வழிகாட்டி "அன்பே சிவம்" என்ற அமுத வாசகத்திற்கிணங்க சிவமாக நின்று ஆட்சிசெய்யும்.

அதற்காக எழுதப்பட்டதுதான் இப்புத்தகவரிசை. நோர்வே சிவசுப்பிரமணிய ஆலயத்தின் வெளியீடாக வெளிவந்த முதற்பாகம் பெற்ற அதிக வரவேற்பு அதன் மறுபதிப்பு வெளிவரச் செய்ததுடன் இரண்டாம் பாகத்தையும் வெளியிடத் தூண்டியது. சின்னஞ் சிறார்களுக்கு இந்நூல்களைக் கற்பியுங்கள். அவர்களுக்குக் கற்பிப்பதற்காக ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு பெற்றோரும் இவற்றைப் படியுங்கள்.

நமது சமயத்தில் நம்மவர்களுக்கு ஆர்வம் குறைகிறதென்பது உண்மை என்றால் நமது சமயத்தின் மேன்மையை அறியாமை தான் காரணம். மறுதலையாக நமது சமயத்தின் மேன்மையை நம்மவர்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு அதில் ஆர்வமில்லை என்பதுதான் காரணம்.

எதிர்மறையான இந்த இரு காரணகாரியத் தொடர்களும் தர்க்கரீதியாக உண்மைதான்.

எனவே, இந்துக்களே, ஆர்வம் கொள்ளுங்கள், அறிந்து கொள்ளுங்கள். அகிலம் முழுதுக்கும் அறிவியுங்கள். பிரபஞ்சத்தில் நாம் ஓர் அங்கம். ஆனால் பிரபஞ்சம் நமக்குள்ளேதான்.

இந்தச் சமயபாடப் புத்தகமானது ஐரோப்பிய நாடுகளில் பிறந்து வளரும் குழந்தைகளை உத்தேசித்து மிக இலகுவான முறையில் ஆரம்ப நிலையிலிருந்து எழுதப்பட்டுள்ளது. எளிமையான சொற்களையே பெரிதும் பயன்படுத்தியிருக்கிறேன்.

படிப்படியாக அரும்பதங்களை அதிகப்படுத்தி ஆசிரியர்கள் அவற்றை விளக்கக்கூடிய வகையில் அரும்பத விளக்கக் குறிப்புக்களையும் சேர்த்திருக்கிறேன். கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் பாடங்களின் இறுதியில் சில வினாக்களையும் சேர்த்திருக்கிறேன்.

அறிவியல், விஞ்ஞான அடிப்படையில் சமயத்தைப் போதிக்க முற்படுவதும் இயற்கையுடன் இணைந்ததே நமது சமயம் என்பதை மனம் கொள்ள வைப்பதும் இந்த நூலின் முக்கிய குறிக்கோள்கள் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

**இந்த இரண்டாம் புத்தகம் ஆறாம் ஆண்டு முதல் பதினோராம் ஆண்டு வரை கற்கும் மாணவர்களுக்கு உகந்தது.** மூன்றாம் புத்தகமொன்று உயர்கல்வி கற்கும் மாணவர்கள் கற்கத் தக்கதாக இனி உருவாக்கப்படும். அதுவும் விரைவில் வெளிவர இறைவன் அருளை வேண்டுகிறேன்.

அச்சிட்டு வழங்கிய **சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்** எனது நன்றிக்குரியவர்கள்.

இந்த நூலைச் சிறந்தமுறையில் பயன்படுத்திச் சிறார்களின் ஆன்மீக அறிவையும் மனிதப் பண்பாட்டுணர்வையும் வளம்படுத்தி எமது இந்துத் தமிழ்ப் பண்பாடு, கலை, கலச்சார விழுமியங்கள் மேம்படப் பணியாற்ற வேண்டுமெனப் பெற்றோரையும் ஆசிரியர்களையும் அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

இணுவில் மேற்கு, சுன்னாகம், பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா **B.A.(Hons)**
இலங்கை. (கோப்பாய் சிவம்.)
தொ. பே. 0094 21 222 6004.

# நமது இந்து சமயம்

*பாகம் II*

(ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு மாணவர்கள் வரை கற்பதற்கு உகந்தது)

## பாடத்திட்டம்

*பாடம் 1*

**இயற்கையும் நாமும்**

இயற்கையுடன் நமக்குள்ள தொடர்புகள், வேத, ஆகம அடிப்படையிலும் அறிவியல், விஞ்ஞான அடிப்படையிலுமான விளக்கங்கள்.

சூழல் மாசடைதலும் அதனைத் தவிர்த்து இயற்கைச் சமநிலை பேணலும்.

*பாடம் 2*

**ஆலயம்**

ஆலய அமைப்பு – சிற்பவியல், தத்துவ – அறிவியல் விளக்கங்கள்.

*பாடம் 3*

**கிரியைகள்**

கிரியை மரபுகள் - நித்திய, நைமித்திக, காமியக் கிரியைகள் பற்றிய ஆகம, தத்துவ, அறிவியல் விளக்கங்கள். மஹோற்சவ வரிசையும் விளக்கமும்.

*பாடம் 4*

**ஒழுக்கமும் ஒழுங்கும்**

ஒழுங்கமைப்பு, அழகு, நெறிமுறை, ஒழுக்கம், மனத்தூய்மை, புறத்தூய்மை.

*பாடம் 5*

**இல்லறக் கிரியைகளும் சடங்குகளும்**

வீடுகளில் நடைபெறும் பூர்வ – அபரக் கிரியைகளின் நோக்கம், நடைமுறைகள். ஆசௌசம் பற்றிய விளக்கம். அகச்சுத்தம், புறச்சுத்தம் தொடர்பான விளக்கக் குறிப்புக்கள். கலை, பண்பாட்டு மரபுகள

# பொருளடக்கம்


இறைவணக்கம் 03

1. இயற்கையும் நாமும் 09

விநாயகரும் சந்திரனும் 17

கொன்றை வேந்தன் 18

2. ஆலயம் 19

கண்ணன் கதை 35

கண்ணன் பாட்டு 37

திருநாவுக்கரசு நாயனார் 38

3. கிரியைகள் 39

உண்மை பக்திக்கு உருகும் இறைவன் 45

திருமுறை கண்ட வரலாறு 46

மூதுரை 48

4. ஒழுக்கமும் ஒழுங்கும் 49

ஔவையும் விநாயகரும் 54

விநாயகர் அகவல் 55

5. இல்லறக் கிரியைகளும் சடங்குகளும் 57

சக்திப் பாட்டு 65

பாடம் - 1

# இயற்கையும் நாமும்

## அ. இயற்கையில் இறைவன்



இயல்பாக உள்ளது இயற்கை எனப்படும். எல்லோரையும் வாழவைப்பது இயற்கையே ஆகும்.

நாம் நமது வாழ்க்கை வசதிகளுக்கு ஏற்றவகையில் அறிவியல், விஞ்ஞான வளர்ச்சிகளைப் பயன்படுத்திச் செய்யப்படுவன செயற்கை ஆகும்.



அதனால் செயற்கையான அமைப்புக்கள், பொருட்கள் முதலிய யாவுமே இயற்கையை அடிப்படையாகக் கொண்டவையே.

நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்றும், வானமும் நாம் வாழும் பூமியும் நாம் பயன்படுத்தும் நீரும் நெருப்பும் இயற்கையின் அடிப்படை அம்சங்களாகும்.



மலையும் நதியும் கடலும் மழையும் மரம் செடி கொடிகளும் இயற்கையின் அம்சங்களே. வானில் நாம் காணும் சூரியன், சந்திரன், கோள்கள், நட்சத்திரங்கள் என்பனவும் இயற்கை நமக்கு வழங்கிய இணையற்ற அற்புதங்கள் அல்லவா?



அறிவினால் இந்த உலகத்தையே ஆளுகின்ற மனிதர்களாகிய நம்மால் இந்த இயற்கைப் பொருட்களை ஆக்கவும் முடியாது. அழிக்கவும் முடியாது. ஆனால் இவற்றைப் பயன்படுத்தி எத்தனையோ புதிய ஆக்கங்களை நாம் உருவாக்குகின்றோம்.


ஒரு பொருளை நாம் உருவாக்கும்போது அவற்றுக்கான மூலப் பொருட்கள் நம்மால் உருவாக்க முடியாத இயற்கைப் பொருட்களாகவே அமைகின்றன.



ஒரு பொருளை நாம் அழிக்கின்றபொழுது அவை தனித்தனியே வேறு பொருட்களாக மாறுகின்றனவே தவிர முற்றாக அழிந்துவிட முடியாது.

உதாரணமாக ஒரு பொருளை நாம் எரித்தால் அதன்பிறகு கரி, சாம்பல் முதலியனவும், கரியமில வாயு அல்லது காபனீரொட்சைட்டு என்னும் ஒருவகை வாயுவும் உண்டாகும். அதேபோல ஒரு பொருளை நாம் மண்ணில் புதைத்துவிடும் போது, காலகதியில் அது சிதைந்து பல்வேறு பொருட்களாக மாறுகின்றது.

எனவே இயற்கைப் பொருட்கள் எல்லாம் தெய்வீக அருட்சக்தி கொண்டவையாகவும், நமது வணக்கத்துக்குரியவையாகவும் நமது முன்னோரால் கொள்ளப்பட்டன.



## ஆ. பிரபஞ்ச இயக்கம்

ஆதிகாலத்திலிருந்தே நமது முன்னோர்கள் இந்த இயற்கைப் பொருட்களைத் தெய்வங்களாக மதித்துப் போற்றி வணங்கினர். உலகத்தில் கிடைத்துள்ள ஆதி இலக்கியங்களிலேயே மிகப் பழைமையானதாகக் கருதப்படும் இருக்கு வேதத்தில் இயற்கைச் சக்திகளைப் பலவிதமாக வர்ணித்துப் போற்றிப் பாடுகின்ற அழகிய பாடல்கள் பல காணப்படுகின்றன.



காற்று நமது சுவாசத்துக்கு உதவுகிறது. பூமி நம்மைத் தாங்கி நிற்பதுடன் நமக்கு வேண்டிய பொருட்களை உருவாக்கித் தருகிறது. நீரும், நெருப்பும் நமது வாழ்வை நடத்திச் செல்கின்றன. ஆகாயத்தில் இவை யாவும் நிலைபெறுகின்றன. அதனால் வாயு பகவான், அக்கினி தேவன், பூமாதேவி, வருணபகவான் என்று இவற்றைத் தெய்வங்களாகப் போற்றி வணங்கும் மரபு காணப்படலாயிற்று.

நிலம் (பூமி) நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் ஏனைய இயற்கைச் சக்திகள் யாவற்றுக்கும் அடிப்படையாக அமைவதால் பஞ்சபூதங்கள் என இவற்றை அழைத்தனர்.

இந்த ஐந்து மூலப்பொருட்களால் உருவானதே பிரபஞ்சம் எனப்படும்.

மனிதனால் ஆக்கி அழிக்க முடியாமலிருக்கும் இவற்றை ஓர் ஒழுங்குமுறையில் நிர்வகிக்கும் ஒருவன் இருப்பதை இதனால் உணர்ந்து அவரே நமது தலைவன் என்று வணங்கினர். அவரே நமது கடவுள் ஆவார்.

பூமி, வானம், வானில் உள்ள கோள்கள் நட்சத்திரங்கள் முதலிய பொருட்கள் யாவற்றையும் சேர்த்துப் பிரபஞ்சம் எனக் கூறுவர். இந்தப் பிரபஞ்சம் என்பது ஒரு சீரான முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

சூரியன் என்ற மிகப் பெரிய அக்கினிக் கோளமே இந்தப் பெரிய பிரபஞ்சத்தின் மத்திய சக்தி என இன்றைய விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டறிந்துள்ளனர். சூரியன் எந்த நேரமும் பேரொளியையும், பெரு வெப்பத்தையும் வீசியபடி சுழன்று கொண்டே இருக்கிறது. சூரியனைச் சுற்றிப் பல நட்சத்திரங்களும், கோள்களும் வலம்வருவதுடன் தம்மைத் தாமேயும் சுற்றுகின்றன.

நாம் வாழும் பூமியும் இவ்வாறுதான் சூரியனை வலம்வருகிறது. நமது பூமியைச் சந்திரன் வலம் வருகிறது. பூமி கோளவடிவாக இருப்பினும் அதிலுள்ள பொருட்கள் விழாமல் இருப்பதற்கு அதன் மத்தியிலுள்ள ஈர்ப்புச் சக்தியே காரணமாக

உள்ளது. அதேபோல இரவு - பகல், வெப்பம் - குளிர், மழை - வெயில் முதலிய மாற்றங்கள் ஏற்படுவதற்குப் பிரபஞ்சத்தின் சுழற்சி இயக்கமே காரணமாக உள்ளது.

இயங்கும் பொருட்கள் எப்போதும் சக்தியுடையவை ஆகின்றன. இயக்கம் இல்லாவிட்டால் சக்தி இல்லை. அதனால் இறைவன் என்றும் இயங்கிக்கொண்டிருக்கிறார் என்று நமது முன்னோர் கருதினர். அதனால் அவரை நடராஜ வடிவத்தில் கண்டு மகிழ்ந்தனர்.

ஆனந்த நடனம் என்னும் அவரது நடனமே இந்தப் பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. இயங்கும்போது சக்தி உண்டாகிறது. சக்தி என்பதை ஒரு பெண்ணாக உருவகித்தனர். அந்தச் சக்தியே நடராஜரின் அருகில் சிவகாமி என்ற பெயரில் காணப்படுகிறாள்.



**தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்**
**ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோ தம்முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு.**

இவ்வுலக இயக்கம் நிகழ்வதற்காக இறைவன் ஐந்தொழில்களை நிகழ்த்துகிறான் . படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவே அந்த ஐந்தொழில்கள் ஆகும். அந்த ஐந்தொழில்களையும் ஆனந்த நடனத்துடன் இணைத்துக் காட்டுவதே இப்பாடல்.

தோற்றம் - படைத்தல், துடி - உடுக்கு. நடராஜரின் கையிலுள்ள உடுக்கு படைத்தலைக் குறிக்கும்.

திதி (ஸ்திதி) - காத்தல் (இருப்பு), அமைப்பு - அபயகரம். அவரது அபயகரம் காத்தலைக் குறிக்கும்.

சங்காரம் - அழித்தல், அங்கி - நெருப்பு (அக்கினி). இறைவனின் கையிலுள்ள அக்கினி அழித்தலைக் குறிக்கும்.

திரோதம் - மறைத்தல், ஊன்றியிருக்கின்ற பாதம் மறைத்தலைக் குறிக்கும்.

முத்தி - அருளல், நான்ற மலர்ப்பதம் - தொங்குகின்ற பாதம், தூக்கிய திருவடி. தூக்கிய திருவடியே அருளலைக் குறிக்கும்.

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண் ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம்

இறைவன் எல்லாப் பொருட்களினுள்ளும் மறைந்திருக்கிறார். எல்லாச் சக்திகளாகவும் அவர் எங்கும் நிறைந்திருக்கிறார்.

ஒலிச்சக்தி, ஒளிச்சக்தி, வெப்பசக்தி, மின்சக்தி, காந்தசக்தி (ஈர்ப்புச் சக்தி) என்று கூறப்படும் பல்வேறுபட்ட சக்திகளுக்கெல்லாம் அடிப்படையாக அவர் எங்கும் வியாபித்திருக்கிறார்.

அதனால், அவர் உருவமற்றவராகக் கருதப்பட்டாலும் அவரை நினைத்து வழிபட ஓர் அடையாளச் சின்னம் தேவை என நம் முன்னோர்கள் கருதினர். அதனால் சிவலிங்க வடிவம் உணரப்பட்டது.



அக்கினிச் சுடராக, நெருப்புக் கோளமாக, பேரொளி வடிவமாக இறைவனைக் கண்டு வழிபடும் மரபு இந்துக்களாகிய நமது முன்னோர்களிடம் மட்டுமல்லாமல் வேறு பல மக்களிடமும் நீண்ட காலம் காணப்பட்டது.

அத்தகைய பேரொளி பொருந்திய அக்கினிச்சுடரின் இறுகிய வடிவமே சிவலிங்க வடிவமாகிறது. அது ஒரு கோள வடிவம் போலக் காணப்படுவதால் தொடக்கம் முடிவு எதுவும் இல்லாதது.

**இ. சிவசக்தி ஐக்கியம்**

இந்தச் சிவலிங்க வடிவத்தில் மேற்பகுதியாகிய லிங்கம் சிவன் என்று ஆண் தெய்வமாகவும், கீழ்ப் பகுதியாகிய பீடம் ஆவுடையார் என்னும் சக்தி வடிவாகிய பெண் தெய்வம் என்றும் உருவகம் செய்வர்.



அன்னையும், தந்தையும் இணைந்து செயற்படும்போதுதான் நமது குடும்பம் என்ற இல்லற வாழ்க்கை இனிமையாக நகருகிறது. இந்தத் தத்துவமே சிவலிங்க வடிவம், நடராஜர் - சிவகாமி வடிவங்களில் புலப்படுத்தப்படுகின்றது. இன்னொரு வடிவத்தையும் இந்துக்கள் போற்றி வணங்குகின்றனர். அர்த்த நாரீஸ்வரர் அல்லது மாதொரு பாகர் என அழைக்கப்படும் இவ்வடிவம் பாதி ஆணும் பாதி பெண்ணும் சேர்ந்த வடிவமாகும்.

விஞ்ஞான அடிப்படையிலும், நேர்முனைவும் (+) எதிர் முனைவும் (-) சேரும்போதுதான் சக்தி பிறக்கிறது. காந்தி சக்தியானது வடமுனையையும், தென் முனையையும் கொண்டுள்ளது. மூலப் பொருட்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படை மூலப்பொருளாக இன்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ள அணுக்களும் நேர் முனைவாகிய புரோத்தன்களையும் எதிர் முனைவாகிய இலத்திரன்களையும் கொண்டவை அல்லவா?

பழமும் அதன் சுவையும் போல, நெருப்பும் அதன் சூடும் போல, மலரும்

அதன் மணமும் போல சிவனும் அம்பிகையும் ஒன்றாக இணைந்திருந்து இப் பிரபஞ்சம் அனைத்துக்கும் அன்னை தந்தையாக (அம்மை அப்பராக) இருந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைப் புரிகின்றார்கள்.

படைத்தல் என்பது ஆன்மாக்களாகிய நமக்கு வேண்டிய உடம்பைத் தந்து இந்த உலகையும், உலகப் பொருட்களையும் உருவாக்கி இங்கு எம்மைப் பிறக்க வைத்தல்.

காத்தல் என்பது நமக்கு இன்ப துன்ப அனுபவங்களைத் தந்து நம்மை வாழவைத்து நம்மை நல்வழிப்படுத்துதல்.

அழித்தல் என்பது இந்தப் பொருட்களை இல்லாது மாற்றி ஆன்மாவை உடலிலிருந்து பிரித்தல். (இறப்பு)

மறைத்தல் என்பது ஆன்மாவைச் சிறிது இளைப்பாறச் செய்தல்.

அருளல் என்பது இவ்வாறு பிறந்தும் வாழ்ந்தும் இருந்தும் நன்னெறிப்பட்ட ஆன்மாவைத் தன்னோடு சேர்த்து இயற்கையுடன் இரண்டறக் கலந்து இன்புறச் செய்தல்.

### ஈ. சூழல் மாசடைதல்

நமது சூழல் வளமான இயற்கையாகும். இயற்கை இயல்பாக இருக்கும்வரை நமது உலகியல் வாழ்க்கை இனிமையாக இருக்கும். இயற்கையின் மாறுதல்கள் சீராக அமைவதைக் காணலாம். நாம் அதற்கேற்ப நம்மை இசைவுபடுத்திக் கொண்டால் சிக்கல்கள் இல்லை.

நாம் நமது விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சி காரணமாக சூழலை மிகவும் மாசுபடுத்தி விடுகிறோம். மாசு என்பது குற்றம் அல்லது அசுத்தம் என்ற பொருள்களையுடையது.

இயற்கைச் சக்திகளின் தெய்வீக நிலையை நாம் புரிந்துகொள்ளாமல் அல்லது அவற்றின் புனிதத்தை மதிக்காமல் நடந்துகொள்ளும்போது இயற்கை சீற்றமடைகிறது. அதனால் புயல், கடும் மழை, கடும் வெப்பம், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.

காற்றில் இருக்கும் இயல்பான தூய்மையும், அதற்கே உரிய அதிர்வுகளும் மாறுபடாமல் நாம் காத்துக்கொள்ள வேண்டும்.

அணு ஆயுதங்கள் முதலிய வெடிப் பொருட்கள், விஷ வாயுக்கள் மூலமும் மிக அதிகமான வாகனங்களின் புகை காரணமாகவும் சூழல் மாசுபடுகிறது. தூய்மையும், புனிதமும் கெடுகிறது.

மிக அதிகமாக ஓசைகளை நாம் உருவாக்குகிறோம். வாகனங்களின் இரைச்சலும், ஒலி பெருக்கிகளின் ஒலிகளும், காற்றின் சீரான அதிர்வுகளைக் குழப்புகின்றன.

விஷ வாயுக்களை உறிஞ்சி நல்ல வாயுக்களை உருவாக்கக் கூடிய மரங்களை நாம் நமது தேவைகளுக்காக அதிகமாக அழித்து வருகிறோம். இவற்றை நாம் தவிர்க்க வேண்டும். சூழலைத் தூய்மையாகவும், அழகாகவும் பேணுவதுடன் அமைதியும், இனிய மெல்லோசைகளும் எங்கும் நிறைந்திருக்கச் செய்யவேண்டும்.

இளைய சமுதாயத்தினராகிய நாம்தான் இவ்விடயங்களில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். இயற்கையில் இருக்கும் இறை சக்தியை நாம் போற்றி மதிக்கப் பழகுவோம். சூழல் மாசடைவதைத் தடுக்க முயலுவோம். இயற்கைச் சமநிலையைப் பேணுவதில் கவனமெடுப்போம். அதன்மூலம் நமது அடுத்த தலைமுறை இயற்கையுடன் இணைந்து வாழவேண்டும். இயற்கையில் உள்ள பிரபஞ்ச சக்தி என்னும் இறை சக்தியை எம்முள் நிரப்பி, இந்த உலகம் முழுவதும் சக்தியைப் பரப்பி நவஉலகை இன்பமயமாக்க உழைப்போம்.

### உ. இயற்கைச் சமநிலை பேணல்

தாவரங்கள் பகலிலே தமது உணவைத் தயாரிக்கும்போது விலங்குகள் சுவாசத்தின்போது வெளிவிடும் நச்சுக்காற்றாகிய காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து அவற்றுக்குத் (விலங்குகளுக்கு) தேவையான பிராண வாயுவாகிய ஒட்சிசனை வெளிவிடுகின்றன. இதுதான் இயற்கைச் சமநிலை எனப்படும் வியப்பான விடயம். இறைவனின் கருணையை நாம் இங்குதான் காண்கிறோம்.

சூரியக் கதிர்களின் அதிகரித்த வெப்பத்தை மரங்கள் தாங்கிப் பூமியைக் காக்கின்றன. மனிதருக்கும், விலங்குகள், பறவைகள், பூச்சிபுழுக்களுக்கும்கூடத் தாவரங்கள் உணவு வழங்கிப் போஷிக்கின்றன. அதனால் மனிதன் தாவரங்களைப் போஷிக்கிறான். போஷிக்க வேண்டும். இதுதான் இயற்கைச் சமநிலை.

காலம் தவறாமல் பூமியில் மழை பொழிவதற்கு மரங்களே காரணமாக இருக்கின்றன. இது விஞ்ஞானிகள் கண்டறிந்த உண்மை.

மரங்களை மனிதன் சாப்பிடுவதில்லை. மரங்களின் பகுதிகளையே உண்ணுகின்றான். வெவ்வேறு மரங்களின் வெவ்வேறு பகுதிகள் நமக்கு உணவாகின்றன. இலைகள், தண்டுகள், பட்டைகள், வேர்கள், கிழங்குகள், பூக்கள், காய்கள், கனிகள், விதைகள் என்று எல்லா வகையிலும் தாவரங்களின் பயனைப் பெறுகின்ற மனிதர் அதற்கு மாற்றீடாகத் தாவரங்களை மிக அதிகமாகப் பயிரிட்டுப் பசளை முதலிய போஷணைப் பொருட்களை வழங்கி வளம் சேர்த்து அவற்றை வளர்த்தும் இயற்கையைப் பேணுகின்றான். அது நமக்கே உரிய கடமை என்பதை நாம் மறக்கக்கூடாது.

பூச்சிகளைத் தவளை சாப்பிடுகிறது. தவளையைப் பாம்பு விழுங்குகிறது.


பாம்பைக் கருடன் உண்ணுகிறது. இது ஒருவகைச் சமநிலை பேணும் வாழ்க்கை வட்டம். இதுவும் ஆண்டவனின் ஏற்பாடுதான். ஆனால் மனித வாழ்க்கை மேம்பாடு உடையது. பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டது. அதனால் அவன் முதலில் நாம் பார்த்த சமனிலை வட்டத்தை வளம் செய்ய வேண்டும்.

ஆடு, மாடு, எருமை முதலியன மனிதனுக்கு வளம் சேர்க்கின்றன. மனிதன் அவற்றை வளர்க்கின்றான். இதுவும் ஓர் இயற்கைச் சமநிலையே.

ஆடு, மாடுகளின் பால் நமக்கு உணவாகிறது. அவற்றின் கழிவுகள் நமது பயிர்களுக்கு வளம் சேர்க்கின்றன. அவற்றின் உழைப்பு எமது வாழ்க்கைக்கு உதவுகின்றது.

எனவே, நாம் அவற்றை வருத்திப் பயன் பெறலாகாது. அவற்றுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் கொடுத்து அவற்றின் ஆரோக்கியத்தையும் கவனித்துக்கொண்டே அவற்றின் பயனைப் பெற வேண்டும்.

இவை எல்லாவற்றையும் விட நமது இறைவழிபாடுகள், கிரியைகள் யாவும் சக்தியை மேம்படுத்துவதாகவும், இயற்கைச் சமநிலையைப் பேணுவதாகவும் அமைகின்றன. வழிபாட்டு முறைகள், ஹோமங்கள், அபிஷேகங்கள் என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். இவற்றை அடுத்த பாடத்தில் விரிவாகக் காண்போம்.



## அரும்பொருட் சொற்கள்

பிரபஞ்சம் - பஞ்சபுதங்களின் சேர்க்கையால் உருவானது.
பூமி, சூரியன், கோள்கள், நட்சத்திரங்கள் முதலிய
யாவற்றையும் ஒன்றுபடுத்திய அமைப்பு.

பூதம் - இயற்கைப் பொருள், மூலப்பொருள்.

ஐக்கியம் - ஒன்றிணைவு, சேர்க்கை

நவ உலகு - புதிய உலகம்

போஷித்தல் - உணவு முதலிய தேவைகளைக் கொடுத்துக் கவனித்தல்.

அபிஷேகம் - புனித நீராட்டு

ஹோமம் - சிறிய யாகம் (வேள்வி), தெய்வீக அக்கினியிலே மந்திரங்கள் கூறி தானியங்கள் முதலியவற்றை இட்டு வழிபடுதல்.

## வினாக்கள்

1. இயற்கை என்பது என்ன?
2. செயற்கை என்பது என்ன?
3. இயற்கை நமக்கு வழங்கிய அற்புதங்கள் யாவை?
4. ஒரு பொருளை நாம் எரிக்கும்போது எஞ்சுகின்றவை யாவை?
5. பஞ்ச பூதங்கள் எவை?
6. பிரபஞ்சம் எப் பெயர்வந்த காரணம் யாது?
7. நடராஜரின் சக்திக்கு என்ன பெயர்?
8. ஐந்தொழில்கள் எவை?
9. சிவனும் சக்தியும் இணைந்த வடிவம் எது?
10. சூழலை நாம் எவ்வாறு பேணவேண்டும்?

# காலப்பகுப்பு

## அயனங்கள் இரண்டு

உத்தராயண காலம் - தை மாதம் முதல் ஆடி மாதம்வரை ஆறு மாதங்கள்.
தட்சிணாயன காலம் - ஆவணி மாதம் முதல் மார்கழி மாதம் வரை ஆறு மாதங்கள்.




# விநாயகரும் சந்திரனும்.

விநாயகப் பெருமான் ஒருநாள் ஆனந்தமாக ஆடிக்கொண்டிருந்தார். அவரது பருத்த வயிறு குலுங்க, யானைக் காதுகள் அசைய, துதிக்கை அங்குமிங்கும் ஆட அவர் துள்ளிக் குதித்து ஆடும்போது அதைப் பார்த்த சந்திரனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவன் அதனை அடக்க மாட்டாதவனாகக் கேலியாகச் சிரித்துவிட்டான்.

சந்திரன் சிரித்ததைப் பார்த்ததும் விநாயகருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே சந்திரனைப் பார்த்து "நீ தேய்ந்து போவாயக" என்று சாபம் இட்டார்.

யாரையும் கேலி செய்யக்கூடாது. அதுவும் தெய்வமாகிய விநாயகரைக் கேலிசெய்யலாமா? சந்திரன் தனது தவறை உணர்ந்தான். மனம் வருந்தினான். எனினும் மறுநாளிலிருந்து ஒவ்வொரு நாளும் அவன் தேய்ந்துபோகத் தொடங்கினான்.



செய்வதறியாது வருந்திய சந்திரன் கருணையே வடிவான சிவபெருமானிடம் ஓடிச்சென்றான். நடந்ததைக் கூறி அழுதான். தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினான். சிவபிரான் அவனைப் பார்த்துக் கூறினார்.

"விநாயகர் இட்ட சாபத்தை யாராலும் மாற்ற முடியாது. அவரது சாபத்தின்படி படிப்படியாக நீ தேய்ந்து பதினைந்தாம் நாள் யார் கண்ணிலும் தென்படாமல் இருப்பாய். ஆனால், மறுநாளிலிருந்து படிப்படியாக வளர்ந்து பதினைந்தாம் நாள் நீ பூரண சந்திரனாகக் காட்சி தருவாய். அதற்கு நான் வரம் தருகிறேன். இவ்வாறு தேய்வதும் மறைவதும் நடைபெறும்"

அதன்படிதான் இப்போதும் நடைபெறுகிறது.

(இப் புராணக் கதையில் ஒளிந்திருக்கும் விஞ்ஞான விளக்கத்தை உங்கள் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.)


# கொன்றை வேந்தன்

## காப்பு

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
3. இல்லறமல்லது நல்லறமன்று
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
8. ஏவா மக்கள் மூவா மருந்து
9. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
11. ஓதலின் சன்றே வேதியர்க் கொழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கழிவு
13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு
14. கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை
15. காவல்தானே பாவையர்க்கழகு
16. கிட்டாதாயின் வெட்டென மற
17. கீழோர் ஆயினும் தாழ உரை
18. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
19. கூர் அம்பாயினும் வீரியம் பேசேல்
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
22. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
23. கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி
24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை

பாடம் - 2



# ஆலயம்

## அ. வேதங்கள் கூறும் இயற்கைத் தெய்வங்கள்

பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் இயற்கைச் சக்தியை இறை சக்தியாக உணர்ந்து அம்மை அப்பராக - சிவமும் சக்தியுமாக - சிவனும் உமையுமாகப் போற்றி வழிபட்டனர் நமது முன்னோர்.



சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் (கி. மு. 1500 இற்கு முன்) வாழ்ந்த நமது முன்னோர்கள் வேதகால மக்கள் எனப்பட்டனர். அவர்களைப்பற்றி இருக்குவேதம் என்ற சம்ஸ்கிருத இலக்கியம் மூலம் நாம் அறியமுடிகிறது.

அவர்கள் காற்று, மழை, சூரியன், சந்திரன், இடி, மின்னல், பூமி, நதி இவை எல்லாவற்றையும் தெய்வங்களாகப் போற்றினர். இயற்கை நமக்கு நல்கும் நன்மைகளைக் கண்டு அவர்கள் நன்றியுணர்வுடையவர்கள் ஆயினர். கடும் மழை, புயற்காற்று, பேரிடி இவற்றைக் கண்டு பயந்தனர்.

இயற்கை மீது மதிப்பும், பயமும், நன்றியும் கொண்டு வணங்கினர். காலை, மாலை, இரவு, பகல் முதலிய காலங்களையும் கடவுளராகக் கருதினர்.

நமது அறிவைத் தூண்டும் ஒளிக் கடவுளாகச் சூரியனை வணங்கினர். காயத்திரி மந்திரம் அவ்வாறு பிறந்ததே. இன்று உலகெங்குமுள்ள பல கோடி மக்கள் துதிக்கின்ற - ஜபம் பண்ணுகின்ற காயத்திரி மந்திரமானது ஒளிக் கடவுளைப் போற்றும் இருக்குவேத மந்திரமே ஆகும்.



ஓம் பூர்புவஸ் ஸுவ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்க்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

- இதுவே காயத்ரி மந்திரமாகும்.

இதன் பொருள் -

யார் நமது அறிவைத் தூண்டுகிறாரோ, அந்தச் சுடர்க் கடவுளின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போமாக.

இந்த காயத்திரி மந்திரத்தையே ஒரு தேவியாக உருவகித்து காயத்ரிதேவி என வழிபடுகின்றனர். அறிவை வளர்க்கும் தேவி காயத்ரி. ஆற்றலை வளர்க்கும் மந்திரம் காயத்ரி.


நீரின் கடவுள் வருணன் என்றனர். அவனே உலக இயக்கத்தின் கண்காணிப்பாளனாக இருக்கிறான். தேவர்களின் தலைவனான இந்திரனே போர்க்கடவுள் ஆகினான். இரவுப்பொழுது ராத்திரி தேவியாகவும், விடியற்பொழுது உஷை ஆகவும், கல்வித் தெய்வம் வாக்தேவீ ஆகவும், பூமி என்பது பூமிதேவி அல்லது பிருதுவீ எனவும் போற்றப்பட்டனர்.

நெருப்பு அக்கினிதேவனாகப் போற்றப்பட்டான். அவனே தேவதூதன் ஆனான். ஓம குண்டத்திலே அக்னி மூட்டி அதில் ஆகுதியாக வழங்கப்படும் பொருட்களை அக்னிதேவன் அந்தந்தத் தெய்வங்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பவனாகக் கருதப்பட்டான்.

### ஆ. யாகங்கள்

இருக்கு வேதத்தை அடுத்து வந்த யஜுர்வேத காலத்தில் பெரிய யாகங்கள் செய்யப்பட்டன. அதன் சுருங்கிய வடிவமாகவே இன்று ஆலயங்களில் ஹோமங்களைச் செய்கிறோம்.

இயற்கை நமக்கு வழங்கிய தானியங்கள், சமித்து என அழைக்கப்படும் காய்ந்த சுள்ளிகள், வேர்கள், கிழங்குகள், காய்கள், கனிகள், விதைகள் முதலியனவும் பல்வேறு உணவுப் பொருட்களும் பால், தயிர், நெய் முதலியனவும் அக்கினியிலே சொரியப்படுகின்றன.



இப்பொருட்களை அக்கினியிலே இடும்போது அவ்வப் பொருட்களுக்கெனத் தனித்தனியான வேத மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுக்கான ஒலியலைகள், அதிர்வுகள் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்த வல்லன. பொருட்கள் அக்கினியில் இடப்படும்போது எழுகின்ற புகையும், வாசனையும் உடலுக்கு ஆரோக்கியத்தையும், உளத்திற்கு மனச்சாந்தியையும், உற்சாகத்தையும் அளிக்கவல்லன. ஒவ்வொரு பொருளை அக்கினியில் இடுவதால் ஒவ்வொருவிதமான பலனைப் பெறலாமென வேதங்கள் கூறுகின்றன.

யாகங்கள் மூலம் மேலெழும்புகின்ற புகைமண்டலத்திலே பிராணவாயுவாகிய ஒட்சிசன் போன்று ஓசோன் எனப்படும் வாயுவும் காணப்படுவதால் அது பூமியைக் காக்கும் படலமாக விளங்குகிறது. சூழலில் ஏற்படும் விஷ வாயுக்களை அகற்றி உயிர்த் தன்மையை இது ஏற்படுத்துகிறது.

இவ்வாறு இயற்கைச் சக்திகளை நோக்கிப் பிரார்த்தனை செய்தும், இசையோடு பாடியும், யாகங்கள் செய்தும் மகிழ்விப்பதன்மூலம் போதிய மழையைப் பெற்றும் தகுந்த காலநிலை மாற்றங்களை அடைந்தும் மகிழ்வான வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் நமது முன்னோர்கள்.

காலகதியில் இவை யாவற்றுக்கும் பின்னணியிலிருந்து இப் பிரபஞ்சத்தை இயக்கும் ஒரு பேரருட் சக்தியை உணர்ந்தனர். அதுவே கடவுள் என வணங்கினர்.

## இ. ஆகமங்கள்

வேதங்கள் போலவே சிவாகமங்களும் நமது சமயத்தின் பழைய அடிப்படை நூல்களாகும்.

"வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுவர்"



என்ற திருமுறை நூல் கூறுவதற்கிணங்க வேதமும், ஆகமமும் இறைவனாலேயே அருளப்பட்டவை. முன்னைய நமது ரிஷிகள் அவற்றைத் தம் ஞானம் என்னும் அதீத மெய்யுணர்வினால் உணர்ந்து உலகுக்குத் தந்தனர்.

வேதம் காட்டிய பிரபஞ்ச சக்தியை ஓரிடத்தில் குவித்துவைத்து அங்கு நாம் சென்று நமக்கு வேண்டிய சக்தியைப் பெற்று உயர்வடையும் வழியை ஆகமங்கள் காட்டுகின்றன. ஆலயங்களை அமைத்து அங்கு உருவங்களை வைத்து அவற்றை வழிபட்டு இறையுணர்வு பெறச் செய்வதே ஆகமங்களின் நோக்கம்.

ஆகம அடிப்படையிலமைந்த ஆலய அமைப்பும், அங்கு நடைபெறும் திருவுருவ வழிபாடும் கணித விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், மனோதத்துவ விஞ்ஞானம் ஆகியவற்றின் இணைப்பையும் தனக்குள் கொண்டிருப்பது வியப்புக்குரிய ஒன்று.

## ஈ. ஆலய அமைப்பு

ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சரியான அளவுப் பிரமாணங்களில் ஆலயம் கட்டப்படுகின்றது. அதன் பாகங்கள் ஒவ்வொன்றும் அதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள திசைகள், கோணங்கள், ஸ்தானங்கள் என்பன சரியாக அமையும்படி அமைக்கப்பட்டிருக்கும்.

சிவாகமங்களின் வழிநூல்களாகிய சிற்ப சாஸ்திரங்கள் ஆலயங்களை அமைக்கும் முறைகளை எடுத்துக் கூறுகின்றன.

வான் நோக்கி உயர்ந்து, குவிந்து கூம்பியிருக்கும் கோபுரங்களை அவை கொண்டிருக்கும். கருவறை அல்லது மூலஸ்தானம் எனப்படும் முக்கிய பகுதி சற்சதுரமாக மூன்று பக்கங்கள் முழுமையாக மூடப்பெற்று முன்புறம் மட்டும் திறக்கப்பட்டிக்கும். அதுவும் திரைச்சீலை ஒன்றினால் மறைக்கப்பட்டிருக்கும். வழிபாட்டின்போது மட்டும் திறக்கப்படும். அவ்வேளையில் அங்கு தீபம் ஏற்றிக் காட்டப்படும்.

இவ்வமைப்பு முறை, செயற்பாடு ஆகியவற்றில் சைவசித்தாந்த தத்துவக் கருத்து உள்ளடங்கி இருக்கும் அதேநேரத்தில் அறிவியல் விளக்கமும் இருக்கிறது.

மேல்நோக்கிக் குவிந்து உயர்ந்திருக்கும் கலசத்தினூடாகப் பிரபஞ்ச சக்தி உள்ளீர்க்கப்பட்டுப் படிப்படியாகப் பரந்து கீழிறங்கி மறுபடி கருவறையின் மையத்தில் அதற்கென விதிக்கப்பட்ட இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திருவுருவத்தில் சேகரிக்கப்படும்.

வழிபாட்டு வேளையில் இறைவனின் திருவருட் சக்தியாகிய பிரபஞ்ச சக்தியின் கதிர்வீச்சு அங்கிருந்து நம்மிடம் வருகிறது.

ஆலயத்தின் அமைப்பு மனித உடலை ஒத்திருப்பதாக அறிஞர்கள் விளக்குகின்றனர். நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் ஒரு மனிதனைக் கற்பனை செய்து பாருங்கள்.

சிரசு எனப்படும் தலைதான் கருவறை. சக்தியை உள்ளீர்த்து உயிர்ச் சுவாசத்தை நடத்தும் மூக்குத்தான் ஸ்தூபி. மூளையின் இடத்தில்தான் திருவுருவம் இருக்கிறது. கழுத்தைக் குறிப்பது அர்த்த மண்டபம்.

மார்பைக் குறிப்பது மஹாமண்டபம். மார்பின் இடதுபுறத்தில் இதயம் உண்டு. அதேபோல மஹாமண்டபத்தின் இடப்புறத்தில் சக்திக்குரிய சந்நிதானம் அமைகிறது.

இதயம், கழுத்து ஆகிய பகுதிகள்தான் நினைவு, செயற்பாடு, ஓசை என்பவற்றுக்கு ஆதாரமாகின்றன. மஹாமண்டபம், அர்த்த மண்டபம் ஆகியவற்றில்தான் கிரியைகள், மந்திரம் ஓதல் முதலியன நடைபெறுகின்றன.

வயிற்றைக் குறிப்பது ஸ்நபனமண்டபம். அங்குள்ள ஜடராக்கினியைக் குறிக்க ஓமகுண்டத்தில் அக்கினி வளர்க்கப்படுகிறது. ஜடராக்கினி என்பது வயிற்றினுள் மறைந்திருக்கும் வெப்ப சக்தி. இதுவே உணவைச் சீரணிக்கச்செய்து சக்தியை உடல் எங்கும் பரப்புகிறது.

கால்கள் ஏனைய மண்டபங்களையும், கைகள் உள்வீதியையும், பாதங்கள் ராஜகோபுரத்தையும் குறிக்கின்றன.

'அண்டத்திலுள்ளது பிண்டத்தில்'' என்பர். அண்டம் என்பது பிரபஞ்சம். பிண்டம் என்பது நமது உடல். பிரபஞ்ச வடிவிலேயே நமதுடல் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வுடல் வடிவிலே கோவில் உருவாகியுள்ளது. இது அற்புதமான ஒரு தொடர்பாகும்.

கருங்கல்லினால் அமைக்கப்பட்ட விக்கிரகம் கருவறையின் உள்ளே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். கருங்கல் அதிர்வுகளை உள்ளீர்த்து அதனைப் படிப்படியாக வெளிவிடும் தன்மை வாய்ந்தது. அங்கு வைக்கப்படும் திருவுருவங்கள் ஆகமங்களில் சொல்லப்பட்ட விதிமுறைப்படி அமைக்கப்பட்டிருக்கும்.

### உ. திருவுருவங்கள்

சிவபிரானைச் சிவலிங்க வடிவிலே ஸ்தாபித்து வழிபடுவது மரபு. முன்னர் குறிப்பிட்டது போலச் சிவனது ஏனைய வடிவங்களான நடராஜர், சந்திரசேகரர் முதலிய வடிவங்களை வெளியில் அதற்கென அமைந்த இடங்களில் வைத்து வழிபடுவோம்.

விநாயகர், சுப்பிரமணியர், அம்பிகை, பைரவர் முதலிய மூர்த்தங்களைப் பிரதான தெய்வமாகவும் பரிவார தெய்வங்களாகவும் வைத்து வழிபடுவதுண்டு.

மூலஸ்தானத்திற்கு முன்னால் அர்த்தமண்டபம், மஹா மண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், கோபுரவாசல், வெளிமண்டபம் என்பன வரிசையாகக் காணப்படும்.

கருவறை, அர்த்தமண்டபம், மஹாமண்டபம், ஸ்நபன மண்டபம் ஆகியவற்றைச் சூழ்ந்து உள்வீதி (உட் பிராகாரம்) காணப்படும். உள்வீதியில் பரிவார சந்நிதிகள் என்ற வகையில் விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், நவக்கிரகம், மஹாலக்ஷ்மி, சந்தான கோபாலர், நாக தம்பிரான், சண்டேஸ்வரர் முதலிய தெய்வங்களுக்கான சிறு தனிக் கோவில்கள் அமைக்கப்பட்டிருக்கும். அம்பிகை மூலஸ்தானத்திற்கு அருகில் மஹா மண்டபத்தில் தெற்கு நோக்கிய தனிக் கருவறையாகக் கோயில் கொண்டிருப்பாள்.

நடேசர், சண்முகர் மற்றும் தாம்ர விக்கிரகம் எனப்படும் பஞ்சலோகத் திருவுருவங்கள் ஸ்நபன மண்டபத்தில் 'சபை' என்ற பெயரில் தனியான சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும். இவை எழுந்தருளிகள் அல்லது உற்சவ மூர்த்திகள் எனப்படும்.

இவை விழாக்களின்போது வீதி உலாவுக்கு எழுந்தருளுகின்றன. சக்தியைத் தற்காலிகமாகச் சேகரித்து உடனுக்குடன் வெளிவிடுவதன் மூலம் எல்லா வெளியிடங்களிலும் சக்திக் கதிர்வீச்சினை இவை ஏற்படுத்துகின்றன.

ஸ்தம்ப மண்டபத்தில் கொடித்தம்பமும், பலிபீடம், நந்தி (இடபம்) என்பனவும் காணப்படும்.

வசந்தமண்டபம், யாகசாலை, பாகசாலை (மடைப்பள்ளி - சமையலறை) வாகனசாலை, களஞ்சியம், வாத்திய மண்டபம், பூத்தொடுக்கும் மண்டபம் முதலியவையும் உள்வீதியில் அமைந்திருக்கும்.

ஸ்தம்ப மண்டபமும் வீதியும் சேர்ந்து பிரதான பகுதி மிகவும் பெரிதாக

அகன்று, அடியார்கள் பலர் ஒன்றுசேர்ந்து வழிபாடு செய்யக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கும்.

இறைவனது திருவுருவங்களை விழாக் காலங்களில் உலாக்கொண்டு வருவதற்காக இடபம், மூஷிகம் (எலி), மயூரம் (மயில்), சிம்மம் (சிங்கம்), குதிரை, ஆடு, யானை முதலிய வாகனங்களும் சிங்காசனம் முதலியனவும் மரத்தினால் செய்து அழகுபடுத்தப்பட்டு வாகனசாலையில் வைக்கப்பட்டிருக்கும். யாகசாலை மஹோற்சவம் என்னும் பெருந் திருவிழாக் காலங்களில் யாக பூஜைகள், ஹோமங்கள் செய்வதற்காகப் பயன்படும். அதேபோல, விழாக்காலங்களில் விசேடமாக எழுந்தருளி விக்கிரகங்கள் (உற்சவ மூர்த்திகள்) வசந்த மண்டபத்தில் வைத்து விசேட தீபாராதனை வழிபாடுகள் செய்யப்படும்.

இவை யாவற்றையும் உள்ளடக்கியதாக வெளிவீதி காணப்படும். தேர்த்திருவிழாவின் போது சுவாமியை வைத்து இழுக்கும் பெருந் தேர்களும், சப்பறம், கைலாச வாகனம், மஞ்சம் முதலியவையும் வெளிவீதிக்கு வெளியே அதற்கென அமைந்த கொட்டகைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

கிராம மக்கள் யாவரும் விழாக் காலங்களில் ஆலயத்திலே ஒன்றுகூடி ஒற்றுமையாக வழிபாடுகளில் ஈடுபட்டு மனச்சாந்தி பேணுவதுடன் சுவாமியை வீதிஉலா எடுத்து வருதல். தேர் இழுத்தல் போன்றவற்றில் ஒன்றுசேர்ந்து ஈடுபட்டு உற்சாகமும், எழுச்சியும் அடைவர். சமூக ஒற்றுமையும், மகிழ்ச்சியும், எழுச்சியும் ஆலயம் சார்ந்து உருவாகுதல் குறிப்பிடத்தக்கது.

பிரதான மூர்த்தி சிவனாக இல்லாமல் விநாயகராக இருக்கும் போது கொடித்தம்பத்துக்கு அருகில் நந்திக்குப் பதிலாக மூஷிகமும், முருகனாக இருக்கும்போது மயூரமும், அம்பிகையாக இருக்கும்போது நந்தி அல்லது சிம்மமும், பைரவராக இருக்கும்போது சுவானமும் (நாய்) வைக்கப்பட்டிருக்கும்.

பரிவார தெய்வங்களின் இடங்களிலும் சிலசில மாறுதல்கள் காணப்படும்.

**ஊ. ஆலய வழிபாடு**



ஆலயம் சென்று வழிபடுதல் என்பது இந்துக்களின் வாழ்க்கையில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. தினமும் ஆலயம் செல்வது சாலச்சிறந்தது. இயலாதவர்கள் செவ்வாய், வெள்ளி மற்றும் விசேஷ விரத, விழாக்காலங்களில் சென்று வழிபடுவது அவசியம்.

**விபூதி தரித்தல்**

ஆலயம் செல்லும்போது ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து விபூதி தரித்துக்

கொண்டு செல்ல வேண்டும். விபூதியை மூன்று விரல்களால் எடுத்து வடக்கு அல்லது கிழக்குத் திசை நோக்கி நின்று அண்ணாந்து நிலத்திலே சிந்தாவண்ணம் சிவசிவ என உச்சரித்தவாறு பூசுதல் வேண்டும். நெற்றியிலும் மார்பிலும் இவ்வாறு பரவிப் பூசுதல் உத்தூளனம் எனப்படும்.



சமயதீட்சை பெற்றவர்கள் விபூதியை நீரில் குழைத்து உடலின் குறிப்பிட்ட இடங்களில் அதற்குரிய மந்திரங்களை உச்சரித்தவாறு பூச வேண்டும். இது திரிபுண்டரம் எனப்படும். ஆலய வழிபாட்டிற்குச் செல்லும்போது இன்னொரு சிவசின்னமாகிய உருத்திராக்கம் அணிதலும் நன்று.

பசுவின் சாணத்தைக் காயவைத்து விராட்டியாக்கியபின் நல்ல நெருப்பிலே அவற்றைச் சுட்டு வெண்ணிறச் சாம்பலாக வரும்போது அதனை எடுத்து அரித்து வாசனைப் பூக்கள் சேர்த்து விபூதி (திருநீறு) தயாரிக்கப்படுகிறது.

பட்டுப்பையில் அல்லது தேங்காய்ச் சிரட்டையிலே உருவாக்கப்பட்ட குடுவையில் அல்லது விபூதி மடலில் திருநீற்றினைச் சேகரித்து வைத்திருக்க வேண்டும்.



இந்த விபூதியை நாம் பூசுகின்ற வேளையெல்லாம் இறைவனை நினைத்துக்கொள்கிறோம். நாம் சைவர்கள் என்பதை எப்போதும் நமது நினைவில் கொள்வதோடு மற்றவர்களுக்கு முன் நம்மை இனங்காட்டும் ஓர் அடையாளச் சின்னமாகவும் விபூதி அமைகின்றது.

திருநீறு நமது உடலில் பூசப்படும்போது உடலிலுள்ள தீய நீர்த்தன்மைகள் உறிஞ்சப்பட்டு உடல் இறுக்கமான கட்டமைப்பைப் பெறுகின்றது.

**ஆடை அணிகலன் அலங்காரங்கள்**

ஆலயம் செல்லும்போது அதற்கே உரிய வகையில் நமது பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கேற்ற வகையில் நம்மைத் தயார்ப்படுத்துதல் அவசியம்.

சாத்வீகமான உணர்வுகளையும் தூய்மையான மன எண்ணங்களையும் ஏற்படுத்தக்கூடிய தோற்றம் மிகவும் அவசியம். "ஆள் பாதி ஆடை பாதி" என்பார்கள். அதற்கிணங்க, நம்மைப் பார்க்கும்போதே பிறர் மனத்தில் ஒரு மரியாதையுணர்வை உருவாக்கக் கூடியதாக நமது ஆடை அலங்காரங்கள் இருக்க வேண்டும்.

வெண்மை நிறமான வேட்டி சால்வையே ஆண்களுக்கு உகந்தது. குளிர் தேசங்களில் வாழ்வோர் மேலங்கி அணிய வேண்டிய அவசியம் ஏற்படுமாயின் வெண்மையான ஷேட் உகந்தது.

பெண்கள் உடலை முழுமையாக மூடியிருக்கும் கீழைத்தேயப் பண்பாட்டுணர்வுக்குகந்த ஆடைகளை அணிய வேண்டும். முக்கியமாகப் பிறர் மனத்தில் விகாரமான சிந்தனை தூண்டப்படாத வண்ணம் சேலை, அல்லது அரைத்தாவணி போன்றவை விரும்பத்தக்கது. இளவர்ணங்கள் கொண்டவையாகவும், எளிமையானவையாகவும் இருத்தல் நன்று.



இளம் நிறங்களும், எளிமையும் எப்போதும் சாத்வீக உணர்வைத் தூண்டி மன அமைதி தரக்கூடியவை. சாந்தியையும், அருளையும் நாடி ஆலயம் செல்லும்போது நமக்கும் பிறர்க்கும் நலம் பயக்கும் ஆடைகள் அவையே ஆகும்.

பெண்கள் அவசியம் திலகம் எனப்படும் பொட்டு அணிதல் வேண்டும். கல்யாணமாகாத கன்னிப் பெண்கள் கறுப்பு நிறமான பொட்டு அணிவர். கல்யாணமான சுமங்கலிப் பெண்கள் சிவப்புநிறக் குங்குமப் பொட்டு அணிவர். சுமங்கலிகள் நெற்றியில் மட்டுமல்லாமல் உச்சி வகிட்டின் ஆரம்பத்திலும் திலகம் அணிய வேண்டும். அங்கு இலக்குமி வாசம் செய்கிறாள்.

ஆண்கள் சந்தனப்பொட்டு அணிதல் வரவேற்கத்தக்கது. மஞ்சள் நிறச் சந்தனம் சிவனையும், சிவப்புநிறக் குங்குமம் சக்தியையும் குறிப்பவை. சக்தி உபாசகர்களாகிய ஆண்களும் குங்குமம் விரும்பி அணிவதுண்டு.

பூஜைகளை நடத்துகின்ற சிவாசாரியார்கள் சிவ - சக்தி ஐக்கியத்தை உணர்த்தும் வகையில் சந்தனம், குங்குமம் இரண்டையும் அணிவதுண்டு.

பொதுவாக நெற்றிப்பொட்டு என்ற இடம் மூன்றாவது கண் ஆகிய அறிவுக் கண்ணுக்குரிய இடமாகும். அந்த இடத்தில் பல நரம்புகள் சந்திக்கின்றன. அந்த இடத்தைக் குளிர்மையாக வைத்திருப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம் பேணப்படுகிறது.

மேலும், ஹிப்நொட்டிசம் என்னும் வசியக்கலை மூலம் நம்மைப் பிறர் வசப்படுத்த முனையும்போது நெற்றியில் புருவ மத்தியே பயன்பாட்டுக்குரிய இடமாகிறது. அதனைத் தடுக்கும் காவலாகவும் திலகம் அமைகிறது. கைவளைகளும், கழுத்து, காது, மூக்கு முதலிய அங்கங்களில் தங்க நகைகளும் அணிவது பெண்களுக்கு அவசியமானதே. அது லஷ்மிகரமாக அமைகிறது. ஆடம்பரமில்லாமல், பிறர் பார்த்து ஏங்கும் வகையிலில்லாமல் இவற்றை அணிவது நன்று.

**கையுறை**

குழந்தைகள், நோயாளர்கள், வயோதிபர்கள், பெரியோர்கள் ஆகியோரிடம் நாம் போகும்போது வெறும் கையுடன் போகக் கூடாது. கையில் ஏதாவது அன்பளிப்புப் பொருட்கள் கொண்டுபோவது நமது பண்பாட்டு மரபு. அவற்றை கையுறை என்பர். அவ்விதமே ஆண்டவனை வணங்க ஆலயம் செல்லும்போதும் அவருக்குச்

சமர்ப்பிக்கத் தகுந்த பொருட்களை நமது தகுதிக்கு ஏற்றவகையில் எடுத்துச் செல்லவேண்டும்.

பித்தளைத் தட்டு அல்லது கூடை ஒன்றிலே வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய், பூக்கள், கற்பூரம், காணிக்கையாகப் பணம் என்பவற்றைக் கொண்டுபோவது சிறப்பு. அர்ச்சனைப் பொருள் என இவற்றைக் கூறுவர்.

இவற்றைவிட இறைவனின் அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், பழவகைகள் முதலியவற்றையும் ஹோமத்துக்குரிய நெய்யையும் கோவிலுக்குக் கொண்டுபோகலாம்.


இயலாதவர்கள் மிகக் குறைந்த அளவில் பூஜைக்குரிய பூக்கள் பத்திரங்கள் (இலைகள்) என்பவற்றையாவது எடுத்துச் செல்லலாம்.

**ஆலயம் செல்லும் முறை**

இப்பொருட்கள் இறைவனுக்குரியவை. புனிதமானவை. எனவே இடுப்பற்குக் கீழே தொங்கவிடாது மார்பளவில் இரு கைகளாலும் தாங்கியபடி சிவநாமங்களை உச்சரித்தபடி இறை சிந்தனையுடன் ஆலயம் செல்லவேண்டும். தூரத்திலேயே ஆலயத்தின் கோபுரம் தெரியும். அதனை நோக்கிச் சிரசின் மீது இரு கைகளையும் குவித்து வணங்கி, அருகில் சென்றதும் கிணற்றிலோ அன்றித் திருக் குளத்திலோ வேறு நீர்நிலைகளிலோ கைகால்களைச் சுத்தம் செய்து, காணிக்கைப் பொருட்களையும் அலம்பி எடுத்துக்கொண்டு அமைதியாக உள்ளே செல்லவேண்டும்.

**வழிபடும் முறைகள்**

கோபுர வாசலினுள்ளே சென்றதும் கொடிமரத்திற்கு இப்பால் வீழ்ந்து வணங்குதல் வேண்டும். வடக்கே அல்லது கிழக்கே தலைவைத்து வணங்க வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் முறை.



அட்டாங்க நமஸ்காரம்: எட்டு அங்கங்கள் நிலத்தில் பட வணங்குவது. தலை, கையிரண்டு, செவியிரண்டு, வாய், புயங்களிரண்டு என்பனவே அட்டாங்கம் என்னும் எட்டு உறுப்புக்களாகும். பூமியில் மார்பு படும்படி வலக்கை முன்னும் இடக்கை பின்னும் நீட்டிப் புயங்கள் மண்ணில் பொருந்தும்படி செய்தும் வலக்காது முதலும் இடக்காது பின்னருமாக நிலத்தில் பொருந்தச் செய்தும் சிரசை நிலத்தில் பொருந்த வைத்தும் வணங்கவேண்டும்

பஞ்சாங்க நமஸ்காரம்: பஞ்சாங்க நமஸ்காரம் என்பது ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் பட வணங்குவது. தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்பனவே பஞ்சாங்கம் என்னும் ஐந்து உறுப்புக்களாகும்.



முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. ஐந்தாங்குரவர் ஆகிய ஆறுமுகநாவலர் அவர்கள் வழிபடும் முறை பற்றிக் கூறும்போது பலிபீடத்திற்கு இப்பால் மட்டுமே வீழ்ந்து வணங்குவது பற்றிக் குறிப்பிடுகிறார்.

உள்ளே நுழைந்து வீதிவலம் வரும்போது சுவாமி சந்நிதிகளில் தனித்தனியே ஒவ்வொரிடத்திலும் வீழ்ந்து வணங்குவது உகந்ததன்று. அங்கே நாம் வீழ்ந்து வணங்கினால் நாம் கால் நீட்டும் திசையில் இன்னொரு சந்நிதானம் இருக்கும். வழிபடுகின்ற மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கும். அதனால் குறித்த இடம் தவிர மற்ற இடங்களில் வீழ்ந்து வணங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

மேலும் சுவாமி திருவுருவங்களைத் தொட்டு வணங்குதல், கருவறையின் சுவர்களில் தலையை முட்டிக்கொள்ளுதல் போன்றவையெல்லாம் அநாவசியமான பழக்கங்கள்.

கண்ட இடங்களிலெல்லாம் கற்பூரம் ஏற்றி வழிபடுதல் ஆகாது. அதற்குரிய இடத்தில் மட்டுமே ஏற்ற வேண்டும்.

நாமே இறைவனை அர்ச்சிக்க வேண்டும் என்னும் ஆவலால் உந்தப்பட்டுத் தெய்வ சந்நிதானங்களில் பூக்கள் எறிந்து வழிபடுதலும் ஆகாது. அது நமக்குத் தகுதியான ஒரு செயலன்று என்பதோடு அம் மலர்கள் பின்னர் அர்ச்சகர்களின் காலில் படும்போது இருவருக்கும் பாபம் ஏற்படுகிறது.

மலரிட்டு வணங்கும் விருப்பு உடையவர்கள் தமது வீட்டிலே சுவாமி அறையிலே சுவாமிப்படங்களின் முன் விளக்கேற்றி மலரிட்டு வழிபடுவது வரவேற்கத்தக்கது.

வீழ்ந்து வணங்கிய பிறகு நந்தியம்பெருமானிடம் (இடபதேவர்) அனுமதி பெற்றபின் உள்வீதியை வலம்வந்து வணங்க வேண்டும்.

விநாயகப்பெருமான் சந்நிதியில் நெற்றியில் மும்முறை குட்டி, கைகளை மாறி வலக்கையால் இடக் காதையும், இடக்கையால் வலக் காதையும் பிடித்துக்கொண்டு மும்முறை இருந்து எழும்பி (தோப்புக்கரணம்) வணங்க வேண்டும்.

வீதிவலம் வந்தபின் உள்ளே சென்று ஸ்நபன மண்டபத்தில் நின்றவாறு மூலவரை வணங்க வேண்டும். வீதிவலம் வரும்போதும் வணங்கும்போதும் சிவநாமங்களை உச்சரித்தலும் திருமுறைப் பாடல்களைப் பாடுதலும் நன்று.

பொதுவாக ஆலயத்தினுள் வீண்வார்த்தை பேசுதலும், வேறு சிந்தனைகளில் ஈடுபடுதலும் ஆகாது. ஆலயத்தையும் அதன் சூழலையும் எப்போதும் அமைதியாகவும், தூய்மையாகவும் வைத்திருத்தல் அவசியம். சூழலில் சக்தியை மேம்படுத்த அமைக்கப்பட்ட ஆலயங்கள் சூழலை மாசுபடுத்தும் வகையில் நாம் நடந்துகொள்ளக்கூடாது.

ஆலயத்தினுள் நந்திக்கும் மூலவருக்குமிடையே குறுக்கே செல்லலாகாது.

சண்டேஸ்வரர் சந்நிதிக்கும் மூலஸ்தானத்துக்கும் இடையில் போவதும் ஆகாது. ஆதனால் சண்டேஸ்வரரை வலம் வரலாகாது.

இறை தரிசனமும், வழிபாடும் முடிந்தபின் சண்டேஸ்வரர் சந்நிதிக்கு சென்று மிக மெதுவாக மும்முறை கைகொட்டி, இறை வழிபாட்டின் பலனைத் தரும்படி அவரை வணங்கவேண்டும்.

சிவபக்தியில் மிகவும் மேம்பட்டவரான சண்டேஸ்வரரை, வழிபாட்டின் பலனை வழங்கும் பதவியில் அமர்த்தியிருக்கிறார் சிவபிரான். சண்டேஸ்வரர் எப்போதும் சிவத்தியானத்தில் இருப்பார். அதனால் அவரைக் குழப்பாது மெதுவாக அவர் கவனத்தை நம்மீது ஈர்க்கும் வகையில் மெதுவாகக் கைகொட்டி வணங்குகிறோம்.

இதன்பின் ஆலயத்தில் அமைதியான ஒரு புறத்தில் தியானத்தில் ஈடுபட வேண்டும். அதன்பின் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு நிறைவோடும், மகிழ்வோடும் வீடு திரும்பலாம்.

## எ. மூலப்பொருட்களும் உபகரணங்களும்

ஆலயங்கள் அமைக்கப் பயன்படும் மூலப்பொருட்கள் எவை என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

கருங்கற்களே மிகப் பொருத்தமானவை. பழையகால ஆலயங்கள் யாவும் கருங்கற் கூட்டங்களே. அவை நிறைவாகச் சக்தியைச் சேமித்து வைத்துச் சிறிது சிறிதாக வெளிவிடும் அற்புத ஆற்றல் கொண்டவை. நீண்டகாலம் இருக்கும் பலம் உடையவை.

வெள்ளைக் கற்கள் ஓரளவுக்கு இதே தன்மை கொண்டிருப்பதால் அதனைப் பயன்படுத்துவர். செங்கற்கள் மண்ணால் தயாரிப்பதனால் அவையும் ஓரளவு ஏற்றுக்கொள்ளத் தக்கவையே. செங்கற்களளே ஓமகுண்டங்கள், யாகசாலைகள் அமைப்பதில் பெரும்பாலும் பயன்படுகின்றன. சீமெந்து, மரம், பிளாஸ்ரிக் மற்றும் நவீனகால மூலப் பொருட்கள் மிகக் குறைந்த பொருத்தப்பாட்டை உடையவை.

வழிபாட்டுக்குரிய திருவுருவங்கள் கருங்கல்லால் அமைக்கப்படுவதே முறை. உற்சவ மூர்த்திகள் பஞ்சலோகக் கலவையால் உருவாக்கப்படுகின்றன. (தங்கம், செம்பு, ஈயம், வெண்கலம், பித்தளை)

பூஜைக்குப் பயன்படும் தட்டுகள், தாம்பாளங்கள், கிண்ணங்கள், பஞ்சபாத்திரம், உத்தரணி, தீபங்கள், குத்துவிளக்குகள், கற்பூரத்தட்டு, கெண்டி, செம்பு, குடம் முதலிய உபகரணங்கள் பெரும்பாலும் பித்தளையில் அமைந்திருக்கும்.

சில இடங்களில் சில உபகரணங்கள் செம்பிலும், வெள்ளியிலும் அமைந்திருக்கும்.

பொதுவாக ஆலயம், விக்கிரகம், பூஜைப்பொருட்கள் யாவுமே பிருதுவி எனப்படும் மண்ணின் அம்சங்கள் ஆகும். எனவே இவை மண்ணால் செய்யப்பட வேண்டும். அல்லது கல்லினாலோ மண்ணிலிருந்து எடுக்கப்படும் உலோகங்களாலோ செய்யப்பட வேண்டும்.

உலோகங்களில் மிக உயர்ந்தது தங்கம். அதற்கடுத்து வெள்ளி. இவை இரண்டும் மிக விசேடமானவை. எனினும் இவற்றின் அதிகூடிய பெறுமதி காரணமாக இவற்றை அதிகம் பயன்படுத்த முடிவதில்லை.

இவற்றுக்கு அடுத்ததாக செம்பு, பித்தளை ஆகிய உலோகங்கள் சொல்லப்படுகின்றன. இவற்றுக்கும் அடுத்த நிலையில் வெண்கலமும் உபயோகப்படலாம்.

இவை யாவும் நல்ல அதிர்வுகளையுடையவை. சக்தியைச் சேமித்து வைத்து வெளிவிட வல்லவை.

**இரும்பு, ஈயம் இரண்டும் கிரியை வழிபாடுகளுக்குப் பயன்படுத்த ஆகாதவை.**

தற்காலத்தில் பெரிதும் பயன்பாட்டிலுள்ளன 'எவர்சில்வர்' என்பதும் முலாம் பூசப்பட்ட இரும்பே ஆகும். அதனால் எவர்சில்வரால் ஆன உபகரணங்களை ஆன்மீகத் தேவைகளுக்காக வீடுகளிலோ ஆலயங்களிலோ பயன்படுத்தக் கூடாது.

இதேபோல, பிளாஸ்டிக் மற்றும் செலூலொயிட் பொருட்களும் பயன்பாட்டுக்கு உதவாதவையே.

**தாவரப் பொருட்கள்**

இனி, கிரியைகளின்போது பயன்படுத்தப்படும் தாவரப் பொருட்களைப் பார்க்கலாம். இவை, ஆலயக் கிரியைகளில் மட்டுமல்லாமல் இல்லங்களில் நிகழும் பூர்வ, அபரக் கிரியைகளிலும் அதிகமாகப் பயன்படுகின்றன. தென்னை, மாமரம், வாழைமரம் முதலிய சில மரங்கள் முழுமையாகக் கிரியைகளுடன் தொடர்புபட்டவை.

மாஞ்சுள்ளி ஹோமத்தில் பயன்படுகிறது. மாம்பழம் அபிஷேகத்திற்கும் நிவேதனத்துக்கும் பயன்படும். மாவிலை கும்பம் அமைப்பதற்கும், தோரண அலங்காரத்திற்கும் உதவுகிறது.

மாவிலை நல்ல அதிர்வினையும், சக்திச் சேமிப்பையும் கொண்டது. தோரணமாகக் கட்டப்படும்போது மங்கலமான நல்லதிர்வுகள் இருக்கும். பூர்வக் கிரியைகளில் உள்முகமாக வளைத்துச் சொருகப்பட்டு சக்தியை உள்ளே சேமிக்கப் பயன்படுகிறது. அமங்கலமான கிரியைகளின்போது துயரமான எண்ண அதிர்வுகளை வெளியே தள்ளிச் சூழலைச் சமநிலைப்படுத்தும் வகையில் வெளிப்புறமாக மடித்துச் சொருகப்படுகிறது.

கும்பத்தின் உருவாக்கத்திலே மாவிலையின் பங்கு மிக முக்கியமானது. இங்கு கும்பம் என்பது என்ன என்பதை முதலில் புரிந்துகொள்வது அவசியம்.

கும்பம்



பூரண கும்பமானது நிறைகுடம் என அழைக்கப்படுகிறது. குத்துவிளக்கேற்றி வைத்து அதனருகில் ஒரு பூரண கும்பம் வைத்துவிட்டால் அங்கு நிறைவான ஒரு மங்கலத் தன்மை வந்து விடும். மிக நீண்ட காலமாக இந்து - தமிழ் - மக்களின் பாரம்பரியமான மங்கலச் சின்னமாக அது விளங்குகிறது.

இந்தக் கும்பமானது சர்வ தேவதா ஸ்வரூபம் எனச் சொல்லப்படுகிறது. எந்தத் தெய்வ சக்தியையும் ஆவாகனம் செய்து வழிபடுகின்ற ஓர் அதிஷ்டானமாக - அருவுருவ ஸ்தானமாக கும்பம் விளங்குகிறது.

விரத பூஜைகளின் போது கும்பத்திலேயே தேவதைகளை எழுந்தருளச் செய்கிறோம்.

கும்பாபிஷேகத்தின்போது மூலமூர்த்தியிலிருக்கும் பெரும் சக்தியைத் தற்காலிகமாக கும்பத்தில் ஆவாகனம் செய்தே யாகசாலையில் எழுந்தருளச் செய்கிறோம்.

கும்பத்தின் குடம் அந்த தேவதையின் உடல் ஆகிறது. அதில் சுற்றப்படும் நூல், நாடி நரம்புகளாகவும், நிரப்பப்படும் நீர் குருதியாகவும், அதில் போடப்படும் இரத்தினங்கள் சுக்கிலமாகவும், ஏனைய வாசனைப்பொருட்கள் மற்றும் உலோகம் முதலியன தாதுப் பொருட்களாகவும், தேங்காய் சிரசு ஆகவும், மாவிலை சிகை ஆகவும், தர்ப்பைக் கூர்ச்சம் ஜடாமுடி ஆகவும், ஆவாகன மந்திரம் அதன் உயிர் ஆகவும் அமைகிறது.

இங்கு தர்ப்பை ஜடாமுடி என்பதும் மாவிலை சிகை என்பதும் கவனிக்கத்தக்கது. சிகை - தலைமயிர், ஜடாமுடி - தலைமயிரால் ஆன மகுடம். இவை ஞானத்தின் அடையாளங்கள்.

சிவாசாரியாரின் ஆறு முக்கிய அங்கங்களில் சிகை ஒன்று. ஆசார்ய லட்சணத்தின்படி அவர் தலைமுடி வளர்த்திருக்க வேண்டும்.

மிகப் பழைய காலத்தில் உலகின் பல பாகங்களிலும் இருந்த அறிஞர் பெருமக்கள், ஞானிகள், ரிஷிகள் முதலியோரைப் பார்க்கும்போது நீண்ட தலைமுடியும், தாடியும் அறிவின் சின்னமாக அவர்களை அலங்கரிக்கக் காணலாம்.

ஒரு கும்பத்தில் அறிவின் வெளிப்பாட்டைக் காட்டும் சிகையாக மாவிலை அமைவது அதன் முக்கியத்துவத்தை மேலும் தெளிவாக்குகிறதல்லவா?

இங்கு மாவிலையுடன் சேர்ந்து முக்கியத்துவம் பெறும் அடுத்த பொருள் தர்ப்பை. அது கூர்ச்ச வடிவில் அங்கு போடப்படுகிறது. கும்பாபிஷேக வேளையில் கும்பத்தினுள்ளே இன்னொரு கூர்ச்சம், பவித்திரம் என்பவையும் தர்ப்பையாலானவையாகப் போடப்படுகின்றன.

### ஏ. சூழல் ஒருங்கிசைவு

தர்ப்பை நமது கிரியைகளில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இது ஒருவகைப் புல். மஹாவிஷ்ணுவின் அவதாரத்துடன் தொடர்புடையது இது. மிகவும் சக்திச் செறிவும் நல்ல அதிர்வும் உடையது தர்ப்பை.

கிரியைகள் செய்யும்போது தர்ப்பாசனத்தில் அமரும்படி சொல்லப்படுகிறது. நமது ஆன்மசக்தி பூமிக்குள் செல்வதை இது தடுக்கிறது.

கிரியையின் தொடக்கத்தில் சங்கல்பம் எனப்படும் கிரியை உறுதிமொழியின் போது வலதுகை மோதிரவிரலிலே தர்ப்பையால் செய்யப்பட்ட பவித்திரம் அணியப்படுகிறது.

ஹோமத்தில் தர்ப்பை மிக முக்கியமாகப் பயன்படுகிறது. ஓமகுண்டத்தைச் சுற்றிப் போடப்படும் விஷ்டரம், பரிஸ்தரணம் என்பவற்றிலும் தொடுபுல், ஞானகட்கம், தர்ப்பைக் கயிறு எனப் பலவிதமான பிரயோகங்களிலும் தர்ப்பை சிறப்பிடம் பெறுகிறது.

வாழை மரத்தை எடுத்துக்கொண்டால் மரமாகவே வாயிலில் அலங்காரத்திற்காகக் கட்டப்படுகிறது. வாழை இலையில் தானியங்கள் பரப்பி அதிலேதான் கும்பம் வைக்கப்படுகிறது. வாழைமரம் அதன் இலை என்பன சூழலில் தோஷங்கள் - மாசுக்களை உறிஞ்சி நல்ல அதிர்வுகளை ஏற்படுத்திச் சக்திச் செறிவை உருவாக்குகின்றன. வாழையிலையில் உணவு பரிமாறிச் சாப்பிடுவது ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது என்பர்.

வாழைப்பழம் முக்கனிகளில் ஒன்று. கனிந்த உள்ளத்தின் அடையாளச் சின்னமாக இறைவனுக்கு சமர்ப்பிக்கப்படும் முக்கிய பொருள் வாழைப்பழம் அல்லவா?

வாழைக்காயும், வாழைத்தண்டும் அபரக்கிரியைகளில் முக்கியம் பெறுகின்றன. பிதிர்தேவர்களுக்கு அவை பிரியமானவை. (வாழைப்பொத்தியும் உணவுக்காகப் பயன்படும் ஒரு பொருள் என்றாலும் பூர்வ, அபரக் கிரியைகளில் அது விலக்கப்படுவது மரபு)

தென்னங்குருத்தினால் ஆகிய தோரணங்களும் மாவிலைகள் போல பூர்வம் அபரம் இரண்டிற்கும் தொங்கவிடப்படுகின்றன. பூர்வக் கிரியைக்கு மேல்நோக்கிய கோணத்தை உடையதாகவும் அபரக் கிரியைகளுக்குக் கீழ் நோக்கிய கோணத்தை உடையதாகவும் இத்தோரணங்கள் செய்யப்படுகின்றன.

வாழைமரம் மாவிலை தோரணம் முதலிய அலங்காரங்கள் ஆன்மீக உணர்வை

மேம்படுத்தும் புறச்சூழலைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய ஒழுங்கமைப்புக்கள் அந்த இடத்தில் சீரான ஒருவகை அதிர்வலைகளை ஏற்படுத்தி மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி உள்முகமான வழிபாட்டுக்கு ஏற்ற ஒரு சூழலை உருவாக்கி விடுகின்றன.

## அருஞ்சொற்பொருள்

*சுடர்* - *ஒளிமுதல், தீச்சுவாலை*
*உஷை* - *உஷத்காலம், விடிகாலைப் பொழுது*
*வாக்தேவீ* - *சொல்லின் இறைவி, அறிவுத் தெய்வம்.*
*அக்கினி* - *நெருப்பு.*
*யாகம்* - *வேள்வி, பெரிய குண்டங்களில் அக்கினியை வளர்த்து அதில் மந்திரம் ஓதிப் புனிதமான பொருட்களை இறைவனுக்காக அர்ப்பணித்தல்.*
*ரிஷிகள்* - *முனிவர்கள்.*
*கலசம்* - *கோவில் கோபுரத்தின் உச்சியில் உலோகத்தினால் செய்துவைக்கப்படும் பகுதி.*
*ஸ்தாபித்தல்* - *அமைத்தல், நிலைநிறுத்துதல்.*
*ஸ்தூபி* - *விமானம், கருவறையின்மேல் அமையும் சிறிய கோபுரம்.*
*ஜடராக்கினி* - *வயிற்றில் இருக்கும் வெப்ப சக்தி.*
*உத்தூளனம்* - *விபூதியை நெற்றியில் பரவிப் பூசுதல்.*
*திரிபுண்டரம்* - *விபூதியை நீரில் குழைத்து நடுவிரல்கள் மூன்றினாலும் நெற்றி மார்பு முதலிய இடங்களில் முக்குறியாகப் பூசுதல்.*
*திலகம்* - *பொட்டு*
*தாம்பாளம்* - *தட்டு*
*பஞ்சபாத்திரம்* - *பூசைக்குரிய நீரை வைத்திருக்கும் அகன்ற வாயை உடைய சிறிய பாத்திரம்.*
*உத்தரணி* - *பஞ்சபாத்திரத்துள் இருக்கும் சிறிய கரண்டி.*
*கெண்டி* - *தண்ணீரைத் தாரையாக விடக்கூடிய மூக்குப்போன்ற குழாயமைப்புப் பொருத்தப்பட்ட செம்பு போன்ற பாத்திரம்.*

# வினாக்கள்

1. இந்துக்களின் ஆதி இலக்கியம் எது?
2. காயத்திரி மந்திரத்தின் பொருள் என்ன?
3. வேதகாலப் போர்க் கடவுள் யார்?
4. உலகின் கண்காணிப்பாளனாகத் திகழ்ந்த வேதகாலக் கடவுள் யார்?
5. தேவதூதன் என்பது யாரை?
6. யாகங்கள் மூலம் கிளம்பும் புகையில் காணப்படும் பிரதான வாயுக்கள் யாவை?
7. இறைவனால் அருளப்பட்ட நூல்கள் எவை?
8. சிற்ப சாஸ்திரங்கள் எதைப்பற்றிக் கூறுகின்றன?
9. ஆலயத்தின் கருவறை மனித உடலின் எப்பகுதியுடன் ஒப்பிடப்படுகிறது?
10. கருவறையிலுள்ள விக்கிரகங்கள் எதனால் ஆக்கப்படுகின்றன?
11. ஆலயத்தில் காணப்படும் மண்டபங்களை வரிசைப் படுத்திக் கூறுக.
12. உத்தூளனம் என்பது என்ன?, திரிபுண்டரம் என்பது என்ன?
13. கையுறை என்பது என்ன?
14. வீதி வலம் வரும்போது என்ன செய்யவேண்டும்?



# கண்ணன் கதை



ஒரு காலத்திலே பூமியில் கொடியவர்கள் அதிகரித்து நல்லோர்கள் பெரும் துன்பம் அடையும் நிலை ஏற்பட்டது. அதனைத் தாங்கமுடியாத பூமாதேவி தேவர்களிடம் முறையிட்டாள். தேவர்கள் யாவரும் நமது காத்தற் கடவுளாகிய ஸ்ரீமந் நாராயணன் என்னும் மஹாவிஷ்ணுவைத் தேடி ஸ்ரீவைகுண்டம் சென்றனர்.

பூமாதேவியின் துயரை அவர்கள் எடுத்துக் கூறியதும் அவர் கருணை கொண்டார். தாம் பூமியில் வசுதேவர் தேவகி என்னும் தம்பதிகளுக்கு கிருஷ்ணனாகப் பிறந்து கொடியவர்கள் யாவரையும் அழித்து நல்லவர்களைக் காப்பதாக வாக்களித்தார்.

பாரத தேசத்திலே யாதவர்கள் அல்லது யது குலத்தவர்கள் என்று ஓர் இனத்தவர்கள் வாழ்ந்து வந்தனர். கம்சன் என்று ஒரு மன்னன் கொடியவனாக இருந்தான். அவனது சகோதரி தேவகி. அவளுக்கும் வசுதேவர் என்பவருக்கும் திருமணம் நடந்தது.

அந்த வேளையில் அசரீரியாக ஒரு குரல் ஒலித்தது. "ஏ, மூடக் கம்சனே, இவர்களுக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தை உன்னைக் கொல்வான்" என்ற அந்தக் குரலைக் கேட்டதும் கம்சன் திடுக்குற்றான். பயம் அவனை ஆட்கொண்டது. தன் தங்கையை அவன் வெறுத்தான். அவளுக்குக் குழந்தை பிறக்கப்போகிறது என அறிந்ததும் வசுதேவரையும் தேவகியையும் சிறையிலடைத்தான்.




குழந்தை பிறந்ததும் அதனைக் கொன்றான். இவ்வாறு ஆறு குழந்தைகளை அவன் கொன்றுவிட்டான். ஏழாவது குழந்தை பிறக்காமலே இடம் மாறி பலராமனாக கோகுலத்தில் பிறந்தது. அதைக் கம்சன் அறியான். அந்த ஏழாவது குழந்தை கருவிலேயே அழிந்துவிட்டது என அவன் எண்ணினான்.

எட்டாவது குழந்தையாகக் கண்ணன் அவதாரம் செய்தான். நள்ளிரவு வேளை. அப்போது வசுதேவர்முன் காட்சிதந்த மஹாவிஷ்ணு அந்தக் குழந்தையைக் கோகுலத்தில் நந்தகோபன், யசோதை தம்பதிகளிடம் விட்டு அவர்களுக்குப் பிறந்துள்ள பெண்குழந்தையை இங்கே கொண்டுவந்து சேர்க்கும்படி கூறி மறைந்தார்.



சிறைக்கதவுகள் தாமாகத் திறந்துகொண்டன. காவலர்கள் யாவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். கண்ணன் பத்திரமாக கோகுலத்தில் சேர்க்கப்பட்டான். அங்கிருந்த பெண்குழந்தை சிறைக்கு வந்து சேர்ந்தது. யாவும் முன்போல மாற்றமின்றிக் காணப்பட்டன.

அதிகாலையில் கம்சன் அங்கு வந்து குழந்தையை எடுத்தான். அதனைக் கொல்லப்போகும்போது அது திடீரென வானில் கிளம்பி அம்பிகையின் திருக்கோலத்தை எடுத்தது. கம்சனை எச்சரித்து மறைந்தது. அப்போதும் அவன் திருந்தவில்லை. தெய்வீகத்தின் மகிமையை அவன் உணரவில்லை.

காலம் கடந்தது. கண்ணன் கோகுலத்தில் வளர்ந்தான். குறும்புத்தனமான சிறுவனாக அவன் அண்ணன் பலராமனுடன் லீலைகள் பல புரிந்தான். இடையர் சேரியில் புல்லாங்குழல் ஊதி மாடுகள் மேய்த்து விளையாடினான்.

ஒருசமயம் பெருமழை பெய்து கோகுலம் அழிந்துவிடுமோ என அஞ்சும் நிலையில் கண்ணன் ஒரு மலையையே தன் கையினால் தூக்கி அதன்கீழ் யாவரையும் இருக்கச்செய்து மக்களைக் காத்தான்.




அங்கிருந்த ஒரு பொய்கையிலே கொடிய நச்சுப்பாம்பு வடிவத்தில் இருந்து யாவருக்கும் துன்பம் செய்த அரக்கனைக் கொன்றான்.

பூதனை என்ற அரக்கியையும்

சகடாசுரன், பகாசுரன், வத்சாசுரன், அகாசுரன் முதலிய பல கொடிய அரக்கர்களையும் இவ்வாறு விளையாட்டாகவே கொன்ற கண்ணன் வளர்ந்ததும் கம்சனையும் கொன்று அவனது கொடுமையிலிருந்து மக்களைக் காத்தான்.

பாண்டவர்களுடன் சேர்ந்து அவர்களைப் பல துன்பங்களிலிருந்து காத்தான். பகவத் கீதை என்னும் அரிய நூலை அர்ச்சுனனுக்கு உபதேசித்தான். துரியோதனன் முதலிய கொடியவர்களை பாரதப் போரிலே கொன்று தர்மத்தை நிலைநாட்டினான்.



பாடி மகிழுவோம்

## கண்ணன் பாட்டு

கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்
வெண்ணை உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்
(கண்ணன் எங்கள்...)

குழலினாலே மாடுகள்
கூடச்செய்த கண்ணனாம்
கூட்டமாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்
(கண்ணன் எங்கள்...)

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப்பாம்பு மீதிலே
நடனமாடும் கண்ணனாம்
(கண்ணன் எங்கள்...)

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூதுசென்று பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்
(கண்ணன் எங்கள்...)

கதை கேட்போம்.

# திருநாவுக்கரசு நாயனார்



மருள்நீக்கியார் என்பவர் சிறுசயதிலேயே தமது தாய்தந்தையரை இழந்தார். திலகவதியார் என்னும் அவரது தமக்கையாரே அவரை அன்போடு கவனித்து வந்தார். சிவபெருமானை பக்தியோடு வழிபட்டுவரும் சைவக் குடும்பம் அவர்களுடையது.

அறிவை வளர்க்கும் ஆவலிலும் புதுமையை விரும்பும் போக்கினால் உந்தப்பட்டும் மருள் நீக்கியார் சமணசமயத்தில் சேர்ந்தார். அக்காலத்தில் சைவ சமயத்திற்கு எதிராகத் தமிழ்நாட்டில் பரவிய அவைதிக சமயங்களில் சமண சமயமும் ஒன்று. சமண சமயத்தவர்கள் வேதங்களை ஏற்பதில்லை. அதனால்தான் அவைதிக சமயம் எனக் கூறப்படுகிறது.



சமணசமயத்தில் சேர்ந்த மருள்நீக்கியார் துறவியாகித் 'தருமசேனர்' என்ற பேருடன் வாழ்ந்துவரலானார். நற்சமயமாகிய நமது சைவசமயத்தைவிட்டு அவர் சமணசமயத்திற்குப்போனதனால் துன்புற்ற அவரது தமக்கையார் சிவபெருமானிடம் பிரார்த்தித்தார். தமது தம்பி மனம் திருந்தி வரச்செய்யுமாறு மன்றாடினார்.

இறைவன் அருளால் மருள்நீக்கியாருக்குச் சூலைநோய் என்னும் கொடிய வயிற்றுவலி ஏற்பட்டது. அதனைத் தாங்கமுடியாது அவர் அவதிப்பட்டார். சமணத் துறவிகள் செய்த வைத்தியங்கள் எதுவும் பலனளிக்கவில்லை. வேறு வழி தெரியாமல் தமக்கையாரிடம் ஓடிவந்தார்.

தம்பியை அன்புடன் விசாரித்த திலகவதியார் அவருக்கு விபூதியைக் கொடுத்துப் பூசச்செய்தார். அருகிலிருந்த திருவதிகை வீரட்டானம் என்ற சிவன்கோவிலுக்கு அழைத்துச்சென்று வணங்கச்செய்தார. அங்கே உள்ள இறைவனைக் கண்டு வணங்கியதும் தாம் செய்த தவறை உணர்ந்து திருந்திய மருள்நீக்கியார் சிவபெருமானின் அருளாலே கவிபாடும் ஆற்றல்பெற்று அவரைப் பாடி வணங்கினார்.



"கூற்றாயினவாறு" என ஆரம்பிக்கும் தேவாரப் பதிகத்தினை அவர்பாடியதும் அவரது சூலைநோய் மாறிவிட்டது. அவரும் சைவ சமயத்தில் நிலைபெற்றார். அவரது அருமையான பாடலைக் கேட்ட சிவபெருமான் அவருக்குத் திருநாவுக்கரசர் என்ற அருமையான பெயரைச் சூட்டி அருள்செய்தார்.

பாடம் - 3

# கிரியைகள்

இறைவன் பரமான்மா எனப்படுகிறார். அவர் பேரருட் சக்தியின் வடிவம். உயிர்கள் சீவான்மா எனப்படுகின்றன. சிற்றறிவுடைய சிறிய சக்தித் துளிகள் இவை.

ஆனால், பரமான்மா - சீவான்மா என்ற சொற்றொடர்களே அவற்றுக்கிடையே உள்ள தொடர்பை எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வுலகில் பிறந்து வாழும் சீவான்மாக்களாகிய நாம் நமது உளப்பாங்கு, ஒழுக்கம், பக்தியுடன் கூடிய வழிபாடு, கிரியைகள் இவற்றின் மூலம் படிப்படியாகப் பக்குவமடைந்து பெரும் சக்தியை நமக்குள் உருவாக்கிப் பரமான்மாவுடன் நாம் இணைந்துவிட வேண்டும். இதுவே நமது வாழ்வின் இலட்சியம்.

இதற்கு உதவுவதற்காகவே ஆலயங்களும், திருவுருவங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அங்கு கிரியைகள் நடத்தப்படுகின்றன. அவற்றின் உட்பொருளுணர்ந்து நாம் அவற்றில் ஈடுபட வேண்டும்.

கிரியைகள் மூவகைப்படும். தினந்தோறும் நடைபெறும் பூஜைகள் நித்தியக் கிரியைகள் எனப்படும். விசேட நாட்களில் நடைபெறும் சிறப்புக் கிரியைகள் நைமித்திகக் கிரியைகள் எனப்படும். ஒருவர் தமது வேண்டுதலுக்காக - நேர்த்திக்கடனுக்காக நடத்தும் விருப்புக் கிரியை காமியக் கிரியை எனப்படும்.

### அ. நித்தியக் கிரியை

தினந்தோறும் ஆலயங்களில் பூஜைகள் நடைபெறுகின்றன. ஒருகாலப் பூஜை, இருகாலப் பூஜை, மூன்றுகாலப் பூஜை, ஆறுகாலப் பூஜை, பன்னிரண்டு காலப்பூஜை என ஆலயத்தின் வசதிக்கேற்பப் பூஜைகள் நடைபெறும்.

இப் பூஜைகளின் முக்கிய அம்சங்களில் சில உண்டு.

இறைதிருவுருவத்தை நீராட்டுதல் அபிஷேகம் எனப்படும். அதனைத் துடைத்து ஆடை அணிகலன்கள் அணிவித்தல் அலங்காரம். வாசனைத்தூபம் காட்டுதல். அதன்பின் இறைவனுக்காகப் புனிதமாக மடைப்பள்ளியில் தயாரான திருவமுதைப் படைத்து நிவேதனம் செய்வித்தல். அமுது செய்வித்தல் எனவும் இதைக் கூறுவதுண்டு. எனினும் உண்மையில் நிவேதனம் என்ற சொல் மிகப் பரந்துவிரிந்த பொருளை உடையது.

நிவேதனம் என்ற சொல்லின் நேர்ப்பொருள் அறிவிப்பு ஆகும். நாளாந்த உணவை எமக்கு வழங்குபவன் இறைவன். அதனால் அதனை அவன்முன் படைத்து அவனுக்கு நமது நன்றியறிதலை அறிவிப்பதே இக்கிரியையின் நோக்கம்.

இதன்பிறகு பல்வேறு தீபங்கள் இறைவன் முன் காட்டுகின்ற தீபாராதனை நிகழ்கிறது. அதன்பின் நடைபெறும் அர்ச்சனை என்பது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இறைவனின் பல்வேறு பெயர்களையும் சொல்லிப் புழ்ந்து போற்றி மலர்களை இறைவன்முன் சொரிந்து வழிபடுதலே அர்ச்சனை ஆகும்.

அர்ச்சனை முடிவில் பஞ்சாரத்தி காட்டப்படும். இதேபோலப் பரிவார தெய்வங்கள் யாவற்றுக்கும் நடைபெற்று, சண்டேஸ்வர பூஜையுடன் பூஜை நிறைவு பெறுகிறது.

### ஆ. நைமித்திகக் கிரியைகள்

விசேட விழா நாட்களில் நடைபெறுவது நைமித்திக பூஜைகளாகும். வழமையான பூஜைகளுடன் கும்பம் வைத்துப் பூஜை செய்து அதனை அபிஷேகம் செய்தல் (இதன் மூலம் தெய்வ சாந்நித்தியம் அதிகரிக்கிறது.) ஓமம் வளர்த்தல், பஞ்சாமிர்தம், பால், இளநீர், அரிசிமா, மஞ்சள்மா, சம்பக்கூட்டு, சந்தனம், குங்குமம் இவற்றால் தனித்தனியே அபிஷேகம் செய்தல். (இதனைப் படிக்கட்டளை அபிஷேகம் என்பர்) நூற்றெட்டு அல்லது ஆயிரம் நாமங்களால் அர்ச்சனை செய்தல். சங்காபிஷேகம் செய்தல் (நூற்றெட்டு அல்லது ஆயிரத்தெட்டுச் சங்குகளில் சங்குத் திரவியம் கரைத்த நீரை நிரப்பி வைத்துப் பூஜை செய்து அவற்றால் அபிஷேகம் செய்தல்) சுவாமி வீதி உலா வருதல், வேதபாராயணம், திருமுறை ஓதுதல், ஆசீர்வாதம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். காமியக் கிரியையிலும் இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகளே நடைபெறும்.

இறை திருவத்தில் இருக்கும் இறைசக்தி குறைந்துவிடாமல் மேலும் மேலும் அதிகரிக்கச் செய்வதற்காகவே கும்பபூஜைகள், அபிஷேகங்கள் என்பன நடைபெறுகின்றன. மீண்டும் மீண்டும் இவை நிகழும் போது மூர்த்தியில் இருக்கும் சக்தி மேலும் பொலிவு பெறுகிறது. இதனையே "உரு ஏறத் திரு ஏறும்" என்று கூறுவர்.

அக்கினி காரியம் அல்லது ஹோமம் நிகழும்போது ஓமகுண்டம் ஒன்றிலே அக்கினி வளர்க்கப்படுகிறது. இந்த அக்கினி சிவாக்கினி என அழைக்கப்படுகிறது.

அக்கினியை முறைப்படி வளர்த்து அதற்கு வேண்டிய உபசாரங்கள் கொடுத்து அதற்குக் காவலிட்ட பின் நாம் வழிபடும் மூர்த்தி அக்கினியிலே ஆவாகனம் செய்யப்படுகிறது. அவருக்குரிய மந்திரங்கள் கூறி ஆகுதிகள் பல வழங்கப்படுகின்றன.

இப்போது மூலஸ்தானத்திலே இருக்கும் திருவுருவத்திலிருக்கும் அதே இறையருட் சக்தியை கும்பத்திலும், அக்கினியிலும் எழுந்தருளும்படி செய்திருப்பதால் மூன்று இடங்களிலும் அந்த சக்தி காணப்படுகிறது. மூலமூர்த்தி பிருதுவியாகிய மண்ணின் அம்சம். (நிலம்) கும்பத்திலிருப்பது நீர், ஓமகுண்டத்திலிருப்பது அக்கினி. இவற்றைச் சூழ்ந்திருந்து தொடர்புபடுத்துவது காற்று. யாவற்றையும் சூழ்ந்திருப்பது ஆகாயம். (பரந்த வெளி)

ஆகாயம் முழுவதும் பரவி நிறைந்திருக்கும் இறைவனை காற்றினூடாக அக்கினியில் கொண்டுவந்து, அதிலிருந்து கும்பத்திலிருக்கும் நீருக்குக் கொண்டுவந்து பின்னர் அக் கும்பநீரை நிலத்தின் அம்சமான விக்கிரகத்தில் அபிஷேகம் செய்வதன் மூலம் ஒன்று சேர்க்கிறோம். இவ்வாறு நமது கிரியைகளில் பிரபஞ்ச மூலப் பொருள்களாகிய பஞ்சபூதங்களும் படிப்படியாக இணைக்கப்படுகின்றன.

### இ. மஹோற்சவம்

வருடம்தோறும் நிகழும் ஒரு நைமித்திகக் கிரியை மஹோற்சவம் ஆகும். ஸ்தம்ப மண்டபத்திலிருக்கும் கொடித் தம்பத்திலே கொடியேற்றம் நிகழ்த்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பத்து அல்லது அதற்கு அதிகமான நாட்கள் தொடர்ந்து திருவிழா நடைபெறும்.

கொடிமரத்திலும் மூலஸ்தான இறைவனையே ஆவாகனம் செய்து வழிபடுவோம். கொடியேற்று விழாவில் ஆழ்ந்த தத்துவ உட்பொருள் இருக்கிறது. சைவசித்தாந்த அடிப்படை உண்மையை நாம் புரிந்துகொண்டால் தான் இதனை விளங்கிக்கொள்ளலாம்.

### சைவசித்தாந்தம்

இப்பிரபஞ்சத்தில் என்றும் உள்ள மூலப்பொருள்கள் மூன்று வகை. பதி, பசு, பாசம் என்பனவே அவை. இவை இறை, உயிர், தளை எனவும் சொல்லப்படும். பதி என்பது தலைவன் ஆகிய இறைவன். (பரமான்மா). பசு என்பது ஆன்மா ஆகிய உயிர். பாசம் என்பது உலகில் நாம் காணும் ஏனைய பொருட்கள், (பாசம் என்பது மலம், ஆன்மாவை மறைத்து நிற்கும் அறியாமை). பதி, பசு, பாசம் எனும் இவற்றை முப்பொருள் என்பர்.

பசுவாகிய ஆன்மா பாசத்திலிருந்து விலகிப் பதியாகிய ஆண்டவனைச் சென்றடைய வேண்டும் என்பதே சைவசமயத்தின் நோக்கம். அதற்கு இறைவனின் திருவருளே உதவுகிறது.

### கொடியேற்றத் தத்துவம்

கொடிமரம் பதி. கொடிச் சீலை பசு. (அச் சீலையில் வரையப்பட்டிருக்கும் நந்தி ஆன்மாவைக் குறிக்கிறது. நந்தியின் மேல் சிவனின் அடையாளச் சின்னமாகிய சூலம் வரையப்பட்டிருப்பது ஆன்மா இறைவனைச் சென்றடையும் பக்குவத்தைப் பெற்றுவிட்டதைக் குறிக்கும்) மஞ்சள் கயிறு திருவருட்சக்தி, தர்ப்பைக் கயிறு பாசம்.

பாசம் ஆகிய தர்ப்பைக் கயிறு பதி ஆகிய கொடிமரத்தில் பசு ஆகியன கொடிச்சீலை ஏறுவதற்குத் தடையாக இருக்கிறது. ஆனால் திருவருளாகிய மஞ்சட் கயிற்றின் உதவியுடன் கொடிச்சீலை மரத்தில் ஏறிச் செல்லும் போது தர்ப்பைக் கயிறு ஒதுங்கிப் பலமிழந்து நிற்கிறது. சீவான்மா படிப்படியாகத் தனது தடைகளை விலக்கித் தகுதிபெற்றுப் பரமாத்மாவுடன் ஐக்கியமாகிவிடுவதையே இவ்விழா காட்டுகிறது.

நந்தியும் பலிபீடமும்

நாளாந்தம் நாம் ஆலயத்தில் காணும் நந்தியும் பலிபீடமும் கூட இதே தத்துவத்தையே விளக்குகின்றன. நந்தி ஆன்மாவின் குறியீடு. அது தன் பாச மலங்களாகிய தடைகளைப் பலிபீடத்தில் பலியிட்டு அகற்றிவிட்டுத் தான் தகுதிபெற்றுப் பதியாகிய இறைவனையே நோக்கியவண்ணம் இருக்கிறது.

இது இறைவனுக்கும் ஆன்மாவுக்குமுரிய நெருங்கிய தொடர்பைக் காட்டுகிறது. அதனால்தான் நந்திக்கும் மூலவருக்கும் இடையில் குறுக்கே போகக்கூடாது என்பர்.

ஐந்தொழில் விளக்கம்

இறைவன் நிகழ்த்தும் ஐந்தொழிலில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியன மஹோற்சவ விழாவில் உருவகப்படுத்தப்படுகின்றன.

கொடியேற்ற விழா படைத்தல் தொழிலைக் குறிக்கும். ஏனெனில் கொடியேற்றத் திருவிழாவில் பேரீதாடனம் அங்குரார்ப்பணம் என்னும் கிரியைகள் நடக்கின்றன. இவை ஆக்குதலைக் குறிப்பன.

தினமும் வாகனங்களில் இறைவன் வீற்றிருந்து வீதிவலம் வருதல் காத்தல் தொழிலைக் குறிக்கும். இறைவன் வெளியே வந்து ஆன்மாக்களைக் காப்பதாகக் கருதப்படுகிறது. மேலும், வாகனங்கள் ஆன்மாவின் குறியீடு. வாகனத்தில் இறை திருவுருவம் வீற்றிருந்து ஆன்மாவில் இறைவனின் திருவருள் பதிவதைக் குறிக்கின்றது.

வேட்டைத் திருவிழாவும், தேர்த் திருவிழாவும் அழித்தலைக் குறிக்கும். தீயவற்றை அழித்து நல்லவற்றைக் காத்தல் என்பதை விளக்கவே இவ்விரு விழாக்களும் நடத்தப்படுகின்றன.

தீர்த்தத் திருவிழாவன்று நடைபெறும் சுண்ணமிடித்துச் சாத்துதலும் கொடியிறக்கியதும் நடைபெறும் மௌனோற்சவமும் மறைத்தல் தொழிலைக் குறிப்பன.

தீர்த்தத் திருவிழாவும், ஆசார்ய உற்சவம் என்னும் குருவைப் போற்றும் விழாவும் அருளலைக் குறிக்கும்.

திருவிழா ஆரம்பமாகிறது என்ற அந்த ஆலயம் சார்ந்த அனைவருக்கும் ஒரு புத்துணர்வையும், எழுச்சியையும் ஏற்படுத்தி விடும். ஆலயச் சூழலையும் தத்தமது இல்லங்களையும் சுத்தப்படுத்தித் தூய்மையும், அழகும் பொலியச் செய்கின்றனர். தாமும் தூய்மை பெற்றுத் தூய உணவுகளை உண்ணுவர். இவற்றால் குறிப்பிட்ட அக்காலங்களில் அந்தச் சுற்றாடல் முழுவதும் சாத்வீகமான அதிர்வுகளால் நிரம்பப்பெற்று உயர்ந்த சக்திச் சேமிப்பும் உருவாகிறது.

ஈ. புனராவர்த்தனம்

சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை ஓர் ஆலயத்தில் கும்பாபிஷேகம்

நடைபெறும். ஆலயக் கட்டடங்கள் புதுப்பிக்க வேண்டிய நிலை அக்காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கும். திருவுருவத்தின் மூர்த்திகரம் (சக்திச் செறிவு) குறைவுற்றிருக்கலாம். அதனால் இவற்றைப் புதுப்பித்து மூர்த்திகரத்தை அதிகரிக்கவே கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இவ்வாறு புதுப்பித்தல் புனராவர்த்தனம் எனப்படும்.

### உ. பாலஸ்தாபனம்

விக்கிரகத்திலுள்ள இறை சக்தி கும்பத்தில் எடுத்து அதனை யாகத்தில் வைத்துப் பூஜைகள் நடைபெறும். இவ்வேளையில் விக்கிரகத்தை அங்கிருந்து அசைத்தெடுத்து பாலாலயம் எனும் தற்காலியகமான ஓரிடத்தில் வைத்தபிறகு மறுபடி குடும்பத்தை அபிஷேகம் செய்வதன் மூலம் இறைசக்தி மீண்டும் விக்கிரகத்தில் சேர்க்கப்படும். இந்நிகழ்வு பாலஸ்தாபனம் எனப்படும்.

### ஊ. பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்

ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்து புதுப்பித்த பிறகு மறுபடி முன்போலவே விக்கிரகத்திலிருந்து கும்பத்திலே சக்தியை எடுத்து யாகத்தில் வைத்துப் பூஜைகள் நிகழும்.

விக்கிரகத்தை முன்போலக் கருவறையில் பிரதிஷ்டை செய்து கும்பத்தை அபிஷேகம் செய்வதன் மூலம் திரும்பவும் இறைசக்தி அங்கு சேர்க்கப்படுகிறது. மஹாகும்பாபிஷேகத்தின்போது அங்கு சேர்க்கப்படும் திருவருட்சக்தி வீரியம் மிக்கதாக இருப்பதற்காகப் பலவிதமான கிரியைகள் அங்கு செய்யப்படுகின்றன. மூன்று, ஐந்து அல்லது ஏழு நாட்கள் இக்கிரியைகள் தொடர்ந்து நடைபெறும்.

நமது ஆலயக் கிரியைகள் யாவுமே நமக்கு விளங்காத மொழியாகிய சம்ஸ்கிருதத்திலேயே அமைந்திருக்கின்றன. இது பற்றிப் பலரும் குறைப்படுவதுண்டு. உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தை நமது தேவைகளுக்காக நாம் படிப்பதுபோல, நமது ஆன்மீகத் தேவைகளுக்காக நமது தெய்வீக மொழியாகிய சம்ஸ்கிருதத்தையும் சிறிது கற்பது நல்லதல்லவா?

மேலும் கிரியைகளில் பயன்படும் மந்திரங்களின் பொருளைவிட அதன் உச்சரிப்பினால் உருவாகும் அதிர்வுகளே மிக முக்கியமானதாகும். கிரியைகளின்போது பயன்படுத்தத்தக்க தமிழ்த் திருமுறைகளும் பல உள்ளன. நாம் அவற்றையும் விடாமல் பயன்படுத்த வேண்டும். தமிழ் நமது தாய்மொழி. சம்ஸ்கிருதம் நமது தந்தை மொழி. இரண்டுமே தெய்வீகமானவை.

# அருஞ்சொற்பொருள்

| | |
|---|---|
| இலட்சியம் | - நோக்கம், இலக்கு. |
| உளப்பாங்கு | - மனநிலை, எண்ணங்கள். |
| தீபாராதனை | - தீப ஆராதனை, தீபங்களால் வழிபடுதல். |
| ஐக்கியம் | - ஒன்றுசேர்தல். |
| புனர்நிர்மாணம் | - மீண்டும் உருவாக்குதல், புதுப்பித்தல். |
| பிரதிஷ்டை | - நன்கு நிலைநிறுத்துதல். |
| வீரியம் | - சக்தி, பலம். |

# வினாக்கள்

1. கிரியைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
2. அபிஷேகம் என்றால் என்ன?
3. இறைவன்முன் மலர்சொரிந்து வழிபடுதல் எவ்வாறு கூறப்படும்?
4. என்றும் உள்ள மூலப்பொருள்கள் எவை?
5. கொடிச்சீலையில் வரையப்படும் நந்தி எதனைக் குறிக்கும்?
6. ஐந்தொழில்கள் எவை?
7. மஹோற்சவத்தில் அருளலைக் குறிப்பன யாவை?



# உண்மை பக்திக்கு உருகும் இறைவன்

நம்பி ஓர் அந்தணச் சிறுவன். அவருடைய தந்தையார் ஓர் விநாயகர் ஆலயத்தின் அர்ச்சகராக இருந்தார். அந்தப் பிள்ளையாருக்குப் **பொல்லாப் பிள்ளையார்** என்று பெயர். பொள்ளுதல் என்றால் உளியினால் செதுக்குதல் என்று பொருள். உளியினால் செதுக்காமல் தான்தோன்றியாக இயல்பாகவே தோன்றியவர் என்பதால் உண்யைில் **பொள்ளாப் பிள்ளையார்** என்று அவருக்குப் பெயர். அதுவே பின்னர் பொல்லாப் பிள்ளையார் என வழங்கலாயிற்று.

ஒருசமயம் அவர் அவசரமாக வெளியூர் போக நேர்ந்தது. அதனால் விநாயகருக்குரிய பூசையை அன்று நடத்தும்படி தன் மகனாகிய நம்பியிடம் கூறிச்சென்றார். கோவிலுக்குச் சென்ற சிறுவனாகிய நம்பி அமுது (நைவேத்தியம்) தயார்செய்து இறைவனுக்கு அபிஷேகம் செய்து அலங்காரம் செய்தபின் பூசையைத் தொடங்கினான். பிள்ளையாருக்குமுன் அமுதை வைத்து உண்ணும்படி வேண்டினான். அவர் உண்ணாமல் இருப்பதைக் கண்டு, தான் ஏதோ தவறு செய்துவிட்டதாக எண்ணினான். அழுதழுது மனம் உருகி வேண்டியும் அவர் அமுது செய்யாமலிருப்பதைக் கண்டு நம்பி மனம் நொந்து தன் தலையைப் பிள்ளையாரின் பாதங்களில் மோதிக்கொண்டான்.

அப்போது விநாயகர் திருவுருவத்திலிருந்து காட்சிதந்த விநாயகர் "நம்பி, பொறு" என்று அவனைத் தடுத்து அந்த அமுதை உண்டு மகிழ்ந்தபின் மறைந்தார். பிள்ளையாரை நேரில் கண்டதையிட்டு மிகவும் மகிழ்ந்தான் நம்பி. அடுத்த நாளும் இதேபோல் நிகழ்ந்தது. நம்பியின் அன்பையும் பக்தியையும் கண்டு மகிழ்ந்த விநாயகர் கல்லாமலே கல்வியறிவைப் பெறும் அருளை நம்பிக்கு வழங்கினார். பெரும் கல்விமானாகவும் பக்திமிக்கவனாகவும் அவன் வாழ்ந்து வரலானான்.

நம்பியாண்டார் நம்பி என அவரை யாவரும் அழைத்துவரலாயினர்.

# திருமுறை கண்ட வரலாறு

தென்னிந்தியாவிலே சோழநாட்டை ராஜராஜ சோழன் என்ற மன்னன் ஆண்டுவந்தான். பல சிவாலயங்களைக் கட்டி அங்கெல்லாம் குடமுழுக்கு நடத்தி சிவ வழிபாடு சிறப்பாக நடைபெற வழிசெய்து சிவபக்தனாக வாழ்ந்துவந்தான்.

ஒருநாள் சில அடியார்கள் இனிமையான சில பாடல்களைப் பாடியதைக்கேட்டு மகிழ்ந்த ராஜராஜசோழன் அந்தப்பாடல்களைப் பற்றி விசாரித்தான். அந்த இனிமையான தேவாரப்பாடல்கள் முழுவதையும் கேட்கவேண்டுமென அவன் ஆசைப்பட்டான். மீதிப் பாடல்கள் எங்கிருக்கின்றன என்று ஒருவருக்கும் தெரியாமலிருந்தது. சிவபிரானைப் புகழ்ந்து பாடும் அந்தப் பாடல்களை எப்படியாவது தேடிப் பெறவேண்டும் என அவன் ஆவலுடன் காத்திருந்தான்.

நம்பியாண்டார் நம்பியைப்பற்றி ராஜராஜசோழன் கேள்விப்பட்டான். அவரைத்தேடிச் சென்று தன் நீண்டநாள் ஆவலைத் தெரிவித்தான். பிள்ளையாரிடம் தனது குறையைத் தீர்க்கும்படி பிரார்த்திக்கச்சொன்னான்.

அவ்வாறே பிள்ளையாரிடம் வேண்டுதல் செய்தார் நம்பி. சிதம்பரம் திருத்தலத்திலே ஓர் அறையில் தேவாரப் பதிகங்கள் எழுதப்பெற்ற ஏடுகள் இருக்கின்றன என்பதை அறிந்தனர்.

சிதம்பரத்தின் வழிபாடுகளை நடத்துகின்றவர்கள் தீட்சிதர்கள் என அழைக்கப்படுவர். அவர்களிடம் மன்னன் சென்று அந்த ஏடுகளைப்பற்றிக் கேட்டான். அந்த அறை காப்பிடப்பட்டிருப்பதாகவும் தேவார முதலிகள் ஆகிய நாயன்மார்கள் மூவரும் வந்தால்தான் அது திறக்குமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சிவபதமடைந்துவிட்ட நாயன்மார்கள் அப்போது எப்படி வருவார்கள்? திகைப்படைந்த மன்னன் இறையருளால் ஒரு யுக்தியைக் கண்டறிந்தான்.

நாயன்மார் மூவரதும் சிலைகளை உடனே செய்வித்து மங்கல

வாத்தியங்களுடனும் சகல மரியாதைகளுடனும் சிதம்பரத்துக்கு எடுத்து வந்தான். அவனது மதிநுட்பத்தை வியந்த தீட்சிதர்கள் இறைவனை வணங்கி அந்த அறையைத் திறந்தனர்.

அங்கே தேவாரத் திரு ஏடுகள் யாவும் மண்மூடியிருக்கும் கொடுமையைக்கண்டு வருந்தி நின்றனர். அப்போது "காலத்திற்குத் தேவையானவற்றைமட்டும் தப்பியிருக்கச் செய்துள்ளோம்" என்று அசரீரி வாக்கு ஒலித்தது. அதன்பின் அவற்றைச் சுத்தம் செய்து நம்பியாண்டார் நம்பி திருமுறைகளாக வகுத்து ஒழுங்குபடுத்தினார்.

திருஞானசம்பந்தருடன் யாழ்வாசித்துவந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் பரம்பரையில் வந்த ஒரு பெண் அவற்றுக்குப் பண்முறை வகுத்து இசையமைத்துக் கொடுத்தாள். அதனை அடியார்கள் பலரும் பயின்றனர். அவர்களை ஓதுவார்கள் என அழைப்பர். எல்லாச் சிவாலயங்களிலும் தேவாரத் திருமுறைகள் பண்ணோடு ஓதப்படுவதற்கு ஓதுவார்களை ராஜராஜசோழன் நியமித்தான். இன்றுவரை ஆலயங்களில் திருமுறைகள் ஓதப்பட்டு வருகின்றன.

பின்னாளில் மாணிக்கவாசகரின் திருவாசகமும் தொடர்ந்து மற்ற அருட்பாடல்களும் திருமுறை வரிசையில் சேர்க்கப்பட்டன.

## பன்னிரு திருமுறைத் தொகுப்பு

| | |
|---|---|
| முதலாம் திருமுறை | திருஞானசம்பந்தர் தேவாரம் |
| இரண்டாம் திருமுறை | திருஞானசம்பந்தர் தேவாரம் |
| மூன்றாம் திருமுறை | திருஞானசம்பந்தர் தேவாரம் |
| நான்காம் திருமுறை | திருநாவுக்கரசர் தேவாரம் |
| ஐந்தாம் திருமுறை | திருநாவுக்கரசர் தேவாரம் |
| ஆறாம் திருமுறை | திருநாவுக்கரசர் தேவாரம் |
| ஏழாம் திருமுறை | சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் |
| எட்டாம் திருமுறை | மாணிக்கவாசகர் திருவாசகம் |
| ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் |
| பத்தாம் திருமுறை | திருமூலரின் திருமந்திரம் |
| பதினோராம் திருமுறை | நாற்பது பிரபந்தங்கள் |
| பன்னிரண்டாம் திருமுறை | சேக்கிழாரின் பெரியபுராணம் |

ஔவையார் அருளிய

# மூதுரை (வாக்குண்டாம்)

*நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி*
*என்று தருங்கொல் எனவேண்டா - நின்று*
*தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்*
*தலையாலே தான் தருதலால்.*

தென்னைமரத்தின் கால்களிலே ஊற்றிய நீரானது பின்னர் அதன் தலையிலிருந்து இளநீராகவும் தேங்காயாகவும் நமக்குக் கிடைக்கிறது. அதனால் நாம் ஒருவருக்குச் செய்யும் உதவிக்குப் பிரதி உபகாரம் எப்போது எங்கிருந்து வரும் என எதிர்பார்த்திருக்கத் தேவையில்லை. எப்படியும் அது கிடைக்கும்.

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க*
*நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் நன்று.*

நல்லவர்களைக் காண்பதும் அவர் சொற்களைக் கேட்பதும் அவரது நற்குணங்களைப் புகழ்ந்துரைப்பதும் அவரோடு சேர்ந்திருப்பதும் எப்போதும் நன்மையையே தரும்.

*தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற*
*தீயார்சொற் கேட்பதுவும் தீதே - தீயார்*
*குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் தீது.*

தீயவர்களைக் காண்பதும் அவர் சொற்களைக் கேட்பதும் அவரது தீயகுணங்களைப்பற்றிச் சொல்வதும் அவரோடு சேர்ந்திருப்பதும் எப்போதும் தீமையையே தரும்.

*மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்*
*உடல் சிறியர் என்றிருக்க வேண்டா - கடல் பெரிது*
*மண்ணீருமாகாது அதனருகே சிற்றூறல்*
*உண்ணீரும் ஆகி விடும்.*

தாழைமடல் பெரியது. மகிழம்பூ மிகச் சிறியது. ஆயினும் தாழம்பூவிலுள்ளதைவிடச் சிறந்த வாசனை மகிழம்பூவில் உண்டு. கடலோ மிகப்பெரியது. அதன் நீர் உடலழுக்கைப் போக்கவும் உதவாது. ஆனால் அக் கடலின் அருகே இருக்கும் சிறிய ஊற்றில் கிடைக்கும் நீர் குடிப்பதற்குகந்த நன்னீராகிறது. எனவே உடலால் சிறியவர்கள் என்று யாரையும் இகழந்து எண்ணவேண்டாம்.

பாடம் - 4

# ஒழுக்கமும் ஒழுங்கும்

## இயற்கை ஒழுங்குகள்

உலக இயக்கம் பிரபஞ்சத்தின் ஒழுங்கமைப்பில் தங்கியிருக்கிறது எனக் கவனித்தோம். சீரான பாதையும் ஒழுங்கான இயக்கமும் தான் எதுவும் சிறப்பாக நடக்க வகை செய்கின்றன.

இதேபோலத்தான் மனிதவாழ்க்கையும் சீரான ஓர் ஒழுங்கில் நடைபெற வேண்டும். மனிதன் ஒழுக்கமுடையவனாக (நற்பழக்கவழக்கங்கள்) வாழவும் வேண்டும்.

வேதகாலத்தில் இயற்கையின் ஒழுங்கமைப்பைக் கவனித்த அக்கால ரிஷிகள் அந்த ஒழுங்குமுறைகளைக் கவனிக்கும் தெய்வம் வருணன் எனக் கண்டறிந்து போற்றினர். அந்த ஒழுங்கமைப்பை ரிதம் எனப் போற்றினர். (ரிதம் என்ற ஆங்கில வார்த்தையுடன் இச் சொல் ஒத்திசைப்பதைக் கவனியுங்கள்.)

## தர்மசாஸ்திரங்கள் கூறும் ஒழுக்கம்

வருணன் ஒவ்வொரு தனி மனிதனுடைய நல்லொழுக்கச் செயற்பாடுகளையும் கண்காணிப்பதாக அவர்கள் கருதினர். ஒழுக்கமாக நடப்பவர்களை அவன் நாப்பதாகவும் தவறாக நடப்பவர்களைத் தண்டிப்பதாகவும் நம்பினர். அதனால் அவர்கள் நல்லொழுக்கங்களைப் பேணி நடந்தனர்.

வேதங்களின் இறுதிப் பகுதியாக அமைந்திருக்கும் உபநிடதங்களில் மனிதன் வாழவேண்டிய நெறிமுறைகள் இவைதான் எனச் சில உபதேசங்கள் இடம்பெற்றிருந்தன.

ஸ்மிருதிகள் எனப்படும் தர்மசாஸ்திரங்கள் வேத உபநிடதங்களின் உபதேசங்களை விரிவுபடுத்தி இந்துக்களின் சட்ட நூல்களாக உருவாக்கப்பட்டன. ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் எனவும், எவற்றைச் செய்யவேண்டும், எவற்றைச் செய்யலாகாது எனவும் விரிவாகத் தர்மசாஸ்திரங்கள் விளக்கின.

உண்மை பேசவேண்டும், தானம் செய்யவேண்டும், தாய், தந்தை, குரு, பெரியோர் ஆகியோரைப் பேணவேண்டும். நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டும். இறைவனை வழிபட வேண்டும் என்பன போன்ற நேர்வழி உபதேசங்களையும் பொய் சொல்லக்கூடாது, பிறருக்குத் தீமை செய்யக்கூடாது, கர்மானுஷ்டானங்களைக் கைவிடக் கூடாது என்பன போன்ற எதிர்மறை உபதேசங்களையும் தர்மசாஸ்திரங்களில் காணலாம்.

## இதிகாசங்களும் புராணங்களும்

தர்மசாஸ்திரங்களில் காணப்படும் நல்லொழுக்கங்களை நடைமுறை

வாழ்க்கையில் கைக்கொண்டொழுகுதல் எப்படி எனக் கதைகளின் வாயிலாக இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும், புராணங்களும் எடுத்துக் கூறுகின்றன.

ஒரு நல்ல மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை இராமாயணத்தில் வரும் இராமன் மூலமாக நாம் அறிகின்றோம். நல்லவர்களுக்குத் தெய்வம் எப்படி உதவி செய்கிறது என்பதை மகாபாரதத்தில் வரும் கண்ணன் மூலமாக அறிகிறோம். தீயவர்கள் எவ்வாறு அழிகிறார்கள் என்பதை இவ்விரு கதைகளிலும் வருகின்ற இராவணன், துரியோதனன், துச்சாதனன், சகுனி முதலியவர்கள் மூலம் அறிகிறோம்.

நாம் செய்யவேண்டிய இறைபணிகள், ஜபம், தபம், விரதம், பூஜை இவைகளைப் புராணங்கள் மூலம் தெரிந்துகொள்கிறோம்.

**நால் வருணம்**

பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்பது நால் வருணம் எனப்படும். தர்மசாஸ்திரங்கள் மனிதர்களின் கடமைகளை இந்த நான்கு பெரும் பிரிவுகளில் வகுத்துக் கூறுகிறது. இக் கடமைகளைப் பாரம்பரியமாகச் செய்து வருவதற்கென நான்கு பிரிவாக மக்களை வகுத்துச் செல்கிறது.

இப்பிரிவு இக்காலத்துக்குப் பொருந்துமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. எனினும் நாம் அது பற்றித் தெரிந்துகொள்வது நல்லதல்லவா?

கல்விசார் கடமைகள் முதல் வகுப்பாகுக்குரியது. வேதம் ஓதுதலும், பிறரை ஓதுவித்தலும், வழிபாடுகள், பிரார்த்தனைகள், வேள்விகளைச் செய்தலும், செய்வித்தலும், பிறருக்குத் தானம் வழங்குதலும், பிறர்தரும் தானங்களை ஏற்றலுமாகிய இக்கடமைகளைப் பிராமணர் என்னும் முதல் பிரிவினர் செய்து வந்தனர். இவர்கள் அந்தணர்கள், மறையவர்கள், வேதியர்கள், குரவர்கள் என அழைக்கப்பட்டனர். இப்பாரம்பரியத்தில் வந்தோரே இன்றும் கோயில் கிரியைகளையும் நமது வீட்டுக்கிரியைகளையும் செய்து வருகின்றனர்.

நாட்டைக் காத்தல், ஆட்சி செய்தல், போர் புரிதல் முதலியவற்றை சத்திரியர்கள் எனப்படும் இரண்டாம் பிரிவினர் செய்து வந்தனர். அரசர்களும், போர்வீரர்களும், காவலர்களும் இப்பிரிவில் அடங்குவர்.

விவசாயம், வர்த்தக வியாபாரம் முதலிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பொருளாதார விருத்தியைச் செய்வோர் வைசியர் அல்லது செட்டிமார் எனப்படும் மூன்றாம் பிரிவினர் ஆவர்.

ஏனைய கடமைகளைச் செய்வோர் சூத்திரர் எனப்பட்டனர்.

மக்கள் பலர் சேர்ந்து வாழும் நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பிற்கு இப்பாகுபாடு முற்காலத்தில் பெரிதும் துணை செய்தது. ஆனால் காலகதியில் பல மாற்றங்கள்

நிகழ்ந்தன. வர்ணப் பாகுபாடு என்பது மேலும் பல பிரிவுகளாகிச் சாதிப் பிரிவினைகளாகவும் ஏற்றத்தாழ்வுகளை உடையதாகவும் மாறிவிட்டது.

**நான்கு ஆச்சிரமங்கள்**

பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரதஸ்தம், சந்நியாசம் என்ற நான்கும் நான்கு ஆச்சிரமங்கள் எனப்படும். இவை முறையே மாணவப் பருவம், இல்லற வாழ்க்கை, துறவுக்கு ஆயத்தம் செய்யும் நிலை, துறவறம் என்ற நான்கு வாழ்க்கைப் படிநிலைகளைக் காட்டுகின்றன. இவற்றை மனித வாழ்க்கையின் நான்கு பருவங்கள் எனவும் கூறலாம்.

ஒரு தனிமனிதன் மாணவனாக ஆசிரியரிடம் கல்வி அறிவைப் பெற்று வளரும் வாழ்க்கையை முதற் பருவம் குறிக்கிறது.

உலகியல் வாழ்க்கைக்குரிய தொழில்சார் கல்வியையும், ஆன்மீக ஞானத்துக்குரிய இறையியற் கல்வியையும், நல்லொழுக்கப் பண்பாட்டுடன் கூடிய வாழ்கைக்குகந்த அறநெறிப் போதனைகளையும் இப்பருவத்தில் ஒருவன் பெற்றுக்கொள்கிறான்.

நல்ல ஒரு வாழ்க்கைத் துணையைப் பெற்றுத் தான் கற்ற கல்வியைப் பிரயோகித்து நல்வழியில் பொருளீட்டி நல்வழியில் செலவிட்டுத் தானும் அனுபவித்துத் தன்னைச் சார்ந்தவர்களையும் வாழ்விக்கும் உயர்வாழ்வுதான் இல்லறப் பருவம் எனப்படுகிறது.

பிள்ளைகளைப் பெற்று வளர்த்து அவர்களுக்குரிய கடமைகளையும் செய்துமுடித்து முதுமையை எட்டுகின்ற நிலையில் உலக வாழ்விலுள்ள பற்றுக்களைக் குறைத்து, தொழில் மற்றும் செயற்பாடுகளையும் குறைத்து ஒதுங்கி வாழுதல் வானப்பிரஸ்தமாகும்.

முற்றாக எல்லாப் பற்றுக்களிலிருந்தும் விடுபட்டுத் துறவியாக இறைநிலையில் ஈடுபட்டிருத்தல் துறவுநிலை ஆகும்.

இந்த நான்கு படிநிலைகள் வெளிப்படையாக நோக்கும்போது இக்கால வாழ்க்கைமுறைக்கு உகந்ததல்ல என உணரமுடிகிறது. எனினும் மானசீகமாக ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைப் படிப்படியாக இத்தகைய வளர்ச்சிப் படிநிலையில் ஈடுபடுத்தலாம் என்பது உண்மையே.

**வாழும் வகை**

இதிகாச புராணங்களைப் படிப்பதன் மூலம் வாழும் வகையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நமது முன்னோர்கள், பெரியோர்களை மதித்து, அவர்களின் வாழ்க்கை முறைகளை அவதானித்து நமது வாழ்க்கைப் பாதையை நாம் வகுத்துக்கொள்ள வேண்டும்.

**நாம் வாழும் காலத்துக்கும், இடத்திற்கும் ஏற்ற வகையிலும், அறிவியல் விஞ்ஞான வளர்ச்சிக்கு உகந்த வகையிலும் நமது வாழ்க்கையை நாம் இசைவாக்கம் செய்வதும் தேவையானதே. அதேநேரத்தில் பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கைவிடாமல் மானசீகமான ஈடுபாட்டுடன் இயங்க வேண்டும்.**

எப்போதும் நமது ஆன்ம ஈடேற்றம் கருதியே நமது சிந்தனைகள் வளர்க்கப்பட வேண்டும். பிற உயிர்களுக்கு இடையூறில்லாமல் நமது வாழ்க்கை நடைபெற வேண்டும்.

எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான் என்பது என்றும் நமது நினைவில் இருக்கவேண்டும். அன்பு, பணிவு, அடக்கம், இன்சொல், தயவு, இரக்கம், பொறுமை, எளிமை, துணிவு என்பன எப்போதும் நமக்கு நலம் தரும் நற்பண்புகளாகும்.

ஆசை, கோபம், பொறாமை, தற்பெருமை, பயம் என்பன நமக்குத் தீங்குவிளைவிக்கும் தீயகுணங்களாகும்.

எச் செயலிலும் ஓர் ஒழுங்குமுறை இருக்கவேண்டும். முன்யோசனை, செயற்திட்டம், தீர்க்கதரிசனம், புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை என்பவற்றை என்றும் கைக்கொள்ள வேண்டும்.

இவற்றை உணர்ந்து நற்செயல் புரிந்து நல்லொழுக்கம் பேணி நல்வாழ்க்கையை வாழ்வதே இறைசக்தியை எம்மிடம் பெருக்கி ஆன்மாவை ஈசனிடம் சேர்க்கும் வழிவகையாகும்.

# காலப்பகுப்பு

## ஆறு பருவ காலங்கள் (ருதுக்கள்)

| | |
|---|---|
| *இளவேனில்காலம் (வசந்தகாலம்)* | *- சித்திரை, வைகாசி மாதங்கள்* |
| *முதுவேனில் காலம்* | *- ஆனி, ஆடி மாதங்கள்* |
| *கார் காலம்* | *- ஆவணி, புரட்டாதி மாதங்கள்* |
| *கூதிர் காலம்* | *- ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்* |
| *முன்பனிக் காலம்* | *- மார்கழி, தை மாதங்கள்* |
| *பின்பனிக் காலம்* | *- மாசி, பங்குனி மாதங்கள்.* |

## அருஞ்சொற்பொருள்

ரிதம் - இயற்கை ஒழுங்கமைப்பு.

வருணன் - வேதகாலக் கடவுள். நீருடன் தொடர்புடையவன்.

ரிஷி - முனிவர்.

ஸ்மிருதி - தர்மசாஸ்திரம்.

வருணம் - மக்களின் சமுதாயப் பிரிவு.

ஆசிரமம் - வாழ்க்கைப் படிநிலை.

இசைவாக்கம் - சூழலுக்கேற்ப இசைவடைதல்.

சகிப்புத்தன்மை - பொறுமை

தீர்க்க தரிசனம் - நடக்கவிருப்பவற்றை முன்கூட்டியே உணர்ந்துகொள்ளுதல்.

## வினாக்கள்

1. இயற்கையின் ஒழுங்கமைப்பை வேதகால மக்கள் எவ்வாறு கூறினர்?
2. அதனைக் கண்காணிக்கும் தெய்வம் யார்?
3. இந்துக்களின் புராதனமான சட்ட நூல்கள் எவை?
4. நால்வருணம் என்பவை எவை?
5. ஆசிரமம் என்பது என்ன?
6. நமக்கு நலம்தரும் நற்பண்புகள் எவை?
7. நமக்குத் தீங்கு விளைக்கும் தீய குணங்கள் எவை?



# ஔவையும் விநாயகரும்

*__சுந்தரமூர்த்தி__ நாயனார் இவ்வுலகிலே பல ஆலயங்களையும் தரிசித்துப் பாடல்கள் பாடிப் பல அற்புதங்களையும் செய்தவர். __சேரமான் பெருமாள் நாயனார்__ என்ற மன்னர் அவரது நண்பர் ஆவார்.*

*தமது கடமைகள் நிறைவுற்றதால் கைலாயம் செல்ல விரும்பிய சுந்தரர் ஒருநாள் இறைவனை நினைந்து பாடல் பாடியதும், வெள்ளை யானை வானுலகிலிருந்து இறங்கிவந்து அவரை ஏற்றிச் சென்றது.*

*இதனைக் கேள்வியுற்ற அவரது நண்பர் சேரமான் பெருமாள் நாயனார் தாமும் அவரோடு செல்ல விரும்பினார். சுந்தரரை மனத்தில் போற்றி வணங்கி இறைவனை வேண்டியபடி தமது குதிரையில் அமர்ந்து அதன் காதுகளில் பிரணவ மந்திரத்தை ஓதினார். அந்தக் குதிரை அவரைச் சுமந்தவாறு வானில் கிளம்பியது. சுந்தரர் சென்ற யானையை வலம் வந்து அதன்முன்னே செல்லத்தொடங்கியது.*

*தமிழ் மூதாட்டி __ஔவையார்__ இதனை அறிந்தார். தாமும் அவர்களுடன் அங்கே செல்லவேண்டுமென ஆசைப்பட்டார். அவர் ஒரு விநாயகர் பக்தை. தினமும் அவர் விநாயகரைப் பூசை செய்து பாடல்கள் பாடி பக்தியுடன் வழிபடுவது வழக்கம்.*

*அன்று ஔவையார் மிக அவசரமாகப் பூசை செய்தார். அப்போது விநாயகர் அவர்முன் தோன்றி "ஔவையே, ஏன் இன்று மிக அவசரமாகப் பூசை செய்கிறாய்?" என்று வினாவினார்.*

*அன்று சுந்தரமூர்த்தி நாயனாரும் அவரது நண்பரான சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாயம் நோக்கிச் செல்கிறார்கள் என்பதை அறிந்து, தாமும் அங்கு செல்ல வேண்டும் ஏ்ன்பதாலேயே அவ்வாறு செய்ததாகக் கூறி மன்னிப்புக் கேட்டார்.*

*"நீ வழமைபோல ஆறுதலாகப் பூசை செய். நான் உன்னை அவர்களுக்குமுன் கைலையில் சேர்த்துவிடுகிறேன்" என்று பிள்ளையார் கூறினார். அதன்படி ஔவையாரும் மிக ஆறுதலாக அன்போடு பூசை செய்து __விநாயகர் அகவல்__ என்ற அற்புதமான விநாயகர் துதியையும் பாடி நிறைவு செய்தார்.*

*உடனே அங்கு மறுபடி தோன்றிய விநாயகர் தமது துதிக்கையால் ஔவையாரைத் தூக்கி, சுந்தரரும் சேரமானும் செல்வதற்குமுன்னரே கைலாசத்தில் சேர்த்துவிட்டார்.*

### ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
பொற்புற விளங்கும் பொருளே கயிலை
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டா ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி

ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாடமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக சூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

# இல்லறக் கிரியைகளும் சடங்குகளும்

நாம் ஆலயங்களில் இறைவனை வழிபடுகிறோம். வழிபாட்டின் அங்கமாக அங்கே பல கிரியைகள் நடைபெறுவதைப் பார்த்தோம்.

நமது இல்லங்களில்கூடப் பல கிரியைகள் அவ்வப்போது நடைபெறுகின்றன. வேத மரபில் வந்த தர்மசாஸ்திரங்களின் அடிப்படையில் சம்ஸ்காரங்கள் எனச் சில கடமைகள் நமக்கு விதிக்கப்பட்டுள்ளன.

பரமாத்மாவுடன் இணையும் வகையில் ஜீவான்மாவைத் தகுதியுடையதாக்கிச் சீர்ப்படுத்தும் செயற்பாடு என்பதே சம்ஸ்காரம் என்பதன் பொருள்.

இதேபோல, சிவாகமங்களும் சில செயற்பாடுகளை ஆன்மாவின் மேம்பாட்டிற்காகச் சொல்லியிருக்கின்றன. இல்லங்களில் நிகழும் இக் கிரியைகளைக் கணவனும், மனைவியுமாக இணைந்து நடத்தும் இல்லற வாழ்க்கையில் உள்ளவர்களே செய்வது மரபு. அதனால் இல்லறக் கிரியகைள் என இவற்றைக் கூறுவதும் பொருத்தமாகும்.

### அ. நித்திய வழிபாடு

வீட்டின் பிரதான அறை சுவாமி அறை என்றே முற்காலத்தில் கூறப்பட்டு வந்தது. இன்றைய வாழ்க்கை முறையில் இடநெருக்கடி, நவீனகால வீடுகளின் அமைப்பு இவற்றை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கும்போது அந்த மரபு முறை கையாளப்படுவதில் உள்ள சிரமம் புரிந்துகொள்ளத்தக்கதே.

எனினும், வீட்டில் ஓர் இடம் இறை வழிபாட்டிற்கென ஒதுக்கப்பட்டிருத்தல் அவசியம். அந்த இடம் புனிதமாகப் பேணப்பட வேண்டும். இடையூறுகள் இல்லாமல் சிறிதுநேரம் வழிபாடு செய்யக்கூடியதாக இருக்கவேண்டும்.



வீட்டிலிருக்கும் வழிபாட்டறையில் சுவாமித் திருவுருவங்களை விட சுவாமிப் படங்களே வைக்கப்படுவது நல்லது. முக்கியமாக விநாயகர், இலக்குமி, முருகன் மூவரது படங்களும் இருப்பது மிக முக்கியமானது. முருகன், வள்ளி - தெய்வானையோடிருப்பது விரும்பத்தக்கது.

இவற்றோடு அம்பிகையுடன் சேர்ந்த சிவன் அல்லது சிவகுடும்பப்படம், சிவகாமி அம்மனுடன் சேர்ந்த நடராசர் படம், சரஸ்வதி,

மஹாவிஷ்ணு இவர்களின் படங்கள் வைக்கப்படலாம். குலதெய்வம் என்ற வகையில் வைரவர், மாரியம்மன், துர்க்கை, காளி ஆகிய படங்களும் ஏற்கத்தக்கதே.

எப்படியிருப்பினும், உக்கிரமான வடிவிலமைந்த படங்கள் தவிர்த்துக்கொள்வது அவசியம். சாந்த மூர்த்தங்களாக இருப்பதே நன்று.

பித்தளைக் குத்துவிளக்கு அல்லது அகல்விளக்கு ஒன்றை அங்கு வைத்து நல்ல நூல் திரியிட்டு நெய் அல்லது சுத்தமான தேங்காய் எண்ணெய் விட்டுக் காலை, மாலை விளக்கேற்றி வைத்து மலர்கள் சாத்தித் திருமுறைப் பாடல்கள் பாடி வணங்க வேண்டும். முடிந்தால் சிறிது நேரம் தியானத்தில் இருக்கலாம். சாம்பிராணித் தூபம் போடுவது மிகவும் நன்று.

இச்செயற்பாடு தடைகளை விலக்கிக் காரியசித்திக்கு வழிவகுப்பதுடன் மன அமைதி, உற்சாகம் ஆகியவற்றுக்கும் உதவும்.

விளக்கினைத் தினமும் துடைத்துப் புதுத்திரியிட்டு ஏற்றுவது வரவேற்கத்தக்கது. வாரம் ஒரு தடவை விளக்கைத் தேய்த்துக் கழுவுவதுடன் சுவாமிப் படங்களையும் துடைத்துத் துப்புரவு செய்யலாம். இதனை வெள்ளிக்கிழமைகளில் செய்யலாகாது. முதல் நாளிலேயே செய்துவிட வேண்டும்.

### ஆ. பண்டிகைகள்

புதுவருடப் பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி, கார்த்திகை விளக்கீடு, நவராத்திரி ஆகிய பண்டிகைகள் பற்றி முதலாம் புத்தகத்தில் விரிவாகப் பார்த்தோம்.

### இ. ஆசௌசம் (துடக்கு அல்லது தீட்டு)

பிறப்பு, இறப்பு தொடர்பாகத் துடக்குக் காத்தல் என்று ஒரு பாரம்பரிய மரபு இந்துக்களிடையே நிலவுகிறது. உடல் சம்பந்தமாக மட்டுமன்றி மன உணர்வு தொடர்பாகவும் இத்தீட்டு என்ற விலக்கு கைக்கொள்ளப்படுகிறது.

உயிர் அல்லது ஆன்மா உடலோடு தொடர்புகொண்டு பூமியில் பிறக்கின்ற நிகழ்வும் மறுதலையாக உடலை விட்டு உயிர் பிரிந்து போகின்ற நிகழ்வும் மிக முக்கியமானவை. ஒன்று இன்பமானது. மற்றது துன்பமானது இரண்டுமே மன உணர்வுகளை அதிகம் பாதிக்கத்தக்கவை.

இந்நிகழ்வுகள் அந்த சுற்றாடலிலும், மிக நெருங்கியவர்கள் தொலைவில் இருந்தாலும் அவர்களையும் பாதிக்கக் கூடியவை. நுண்மையான சில அதிர்வுகள் அல்லது அருட்டுணர்வுகள் தொடர்பானவை என விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒரு மாதகாலம் இந்தத் துடக்கு நீடிக்கிறது. குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் தாய் தந்தையர்க்கும், தந்தையின் சகோதரர்கள், பெற்றோர் மற்றும் ஆண்வழி உறவினர்களுக்கும் இத்துடக்கு உண்டு.

இதேபோல ஒருவர் இறந்தால் இறந்தவரின் ஆண்வழி உறவினர்களுக்கு அத்துடக்கு உண்டு.

துடக்குக் காலத்தில் ஆலயத்துக்குச் செல்லுதலும், கிரியைகளில் பங்குகொள்ளுதல் விரதம் இருத்தல், சுபகாரியங்களில் கலந்துகொள்ளல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

31ம் நாளில் வீட்டிற்குப் புரோகிதர் (குருக்கள்) வந்து துடக்குக் கழித்தல் என்ற கிரியை செய்த பின்பே துடக்குக் கழிகிறது.

பெண்கள் ருதுவாகும்போதும் இவ்வாறான தீட்டு ஒன்று உண்டு. ஆனால் அது அந்தப் பெண்ணை மட்டுமே சாரும். இக்காலத்தில் அப்பெண்ணைத் தனியே நீக்கிவைக்காமல் வீட்டில் யாவரும் ஒன்றாக புழங்குவதால் அந்த வீட்டுக்காரரும் துடக்குக் காக்கின்றனர்.

பெண் ருதுவாகி 7ம், 9ம் அல்லது 11ம் நாள் அவளுக்குத் தோயவார்த்து வீட்டில் துடக்குக் கழித்தல் செய்ததும் துடக்கு நீங்கிவிடுகிறது.

மாதம்தோறும் பெண்களுக்கு உண்டாகும் மாதவிலக்கின்போது ஐந்து நாட்களும் அப்பெண் தீட்டு உடையவள் ஆகிறாள். அந்த நாட்களில் அவள் சுபகாரியங்கள் எதற்கும் தகுதியற்றவளாகிறாள். அவள் தனியே ஒதுங்கி இருப்பது அவசியம். ஐந்தாம் நாள் தோய்ந்த பின் அவள் தகுதியுடையவள் ஆகிறாள்.

### துடக்குக் கழித்தல்

பிள்ளையார் உருவம் ஒன்று மஞ்சள் அல்லது சாணியினால் பிடித்து அறுகம்புல் சாத்தி அதற்கு முதலில் பூஜை செய்யப்படும்.

பால், தயிர், நெய், கோசலம், கோமம் என்னும் பசுவின் ஐந்து பொருட்களும் ஒன்றாகச் சேர்ந்து அதற்குப் பூஜை செய்யப்படும். இது பஞ்சகவ்விய பூஜை எனப்படும். பஞ்ச - ஐந்து, கவ்வியம் - பசுவில் பெறப்படுவது.

இதன் பின் ஒரு கும்பத்தில் வருணன் ஆவாகனம் செய்யப்பட்டு அவருக்குப் பூஜை நிகழ்கிறது. புண்ணியாக வாசனம் எனும் மந்திரம் ஓதப்படுகிறது.

பஞ்சகவ்வியம், வருண கும்பத்தின் நீர் என்பன கலக்கப்பட்டு அதனைத் துடக்குடையோர் யாவரும் அருந்துவர். அந்த நீர் வீடுமுழுவதும் தெளிக்கப்படுகிறது. இதுவே துடக்குக் கழிவு ஆகும்.

### ஈ. சாமர்த்தியச் சடங்கு

ஒரு பெண் ருதுவாகியதும் குறித்த நாளின் பின் துடக்குக்கழிவு என்ற கிரியையுடன் சாமர்த்தியச் சடங்கும் நிகழ்கிறது. பெண்ணை அலங்கரித்து மணவறையில் இருத்தி அவளை யாவரும் ஆசீர்வதிக்கின்றனர். தோஷங்கள்

நீக்குவதற்காக பிட்டு, களி, அன்ன உருண்டைகள், நிறைகுடம், நிறைநாழி, குத்துவிளக்கு முதலிய பொருட்களினால் ஆரத்தி எடுத்துத் திருஷ்டி சுற்றப்படுகிறது. கண்ணூறு கழித்தல் என இதனைச் சொல்வர்.

பூக்கள், தங்க நகைகள், நாணயங்கள், பால், மஞ்சள், குங்குமம், கண்ணாடி முதலிய மங்கலப் பொருட்களைப் பூஜை செய்து லக்ஷ்மிவாசம் செய்யும் அந்தப் பொருட்களை ஒவ்வொன்றாக அந்தப் பெண் தரிசிக்கச் செய்வதுமுண்டு.

ஒரு பெண் வயதுக்கு வந்துவிட்டாள். அவள் இயற்கையான மலர்ச்சியைப் பெற்றுவிட்டாள் என்ற செய்தியை அனைவருடனும் பகிர்ந்து ஆசீர்வாதம் பெறுவதும் மகிழ்ச்சியுடன் விருந்து உண்பதும் இச்சடங்கின் பிரதான நோக்கங்களாக அமைகின்றன.

**உ. கல்யாண வீடு (திருமணம்)**

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமண பந்தத்தில் இணைந்து இல்லறம் என்னும் நல்லறத்தை ஆரம்பிப்பதைக் கொண்டாடுமுகமாகக் கல்யாண வீடு என்ற சடங்கு நடைபெறுகிறது.

இச்சடங்கிலே கவனிக்கத்தக்க முக்கிய அம்சங்கள் வருமாறு.

01. புதிதாக வாழ்வை துவங்க இருக்கும் அவ்விருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து புரிந்துகொள்ளல்.

02. புதிய வாழ்வை விநாயக வழிபாடு, நவக்கிரக வழிபாடு, சிவசக்தி வழிபாடு, அக்கினி வழிபாடு என்பவற்றோடு ஆரம்பித்தல்.

03. மணமகனும் மணமகளும் தாம் ஒருவரை ஒருவர் பிரியாது அந்த இணைப்பை மதித்து இறுதிவரை வாழ்வோம் என உறுதிகொள்ளல்.

04. அக்கினி சாட்சியாகவும், பெரியோர் சாட்சியாகவும் தமது திருமண பந்தத்தை உறுதிசெய்து பகிரங்கப்படுத்தல்.

05. பெற்றோர், குரு, பெரியோர் ஆகியோரின் ஆசியைப் பெறுதல்.

06. உறவினர், நண்பர், அயலவர் அனைவருடனும் சேர்ந்து விருந்துண்டு மகிழுதல்.

**ஊ. புதுவரவுக்கான சடங்குகள்**

ஒரு புதிய ஆன்மா உடல்பெற்று இப் பூவுலகில் பிறக்கும் சம்பவம் படிப்படியாக கொண்டாடப்படுகிறது.

ஒரு பெண் கருவாகியிருக்கும்போது சீமந்தம், வளைகாப்பு முதலிய சடங்குகள் சில வகுப்பினரால் (முக்கியமாகப் பிராமணர்களால்) செய்யப்படுகிறது.

குழந்தை பிறந்து 31ம் நாள் துடக்குக்கழிவு நடைபெறும்போது குழந்தைக்குப் பெயர்சூட்டுதல் என்னும் சடங்கும் நடைபெறும். இது நாமகரணம் எனப்படும்.



### கோயிலுக்கு எடுத்தல்

குழந்தை பிறந்து 41ம் நாள் குழந்தையை முதன்முதல் ஆலயத்துக்கு எடுத்துச்சென்று வழிபாடுகள் நடத்துவர்.

### அன்னப்பிராசனம்



பின்னர் பால்பருக்கு அல்லது சோறு தீத்துதல் என்னும் சடங்கு நடைபெறும். 5ம், 7ம், 9ம் மாதங்களில் பெண் குழந்தைக்கும் 6ம், 8ம், 10ம் மாதங்களில் ஆண்குழந்தைக்கும் சோறு தீத்துவார்கள். குழந்தையை ஆலயத்துக்கு எடுத்துச்சென்று வழிபாடு செய்தபின் சுபநேரத்தில் நன்கு பிசைந்த பாற்சோற்றைக் குழந்தைக்கு ஊட்டுவர். பால் மட்டும் அருந்தி வளரும் பிள்ளைக்கு முதன்முதல் உணவூட்டும் இந்நிகழ்வு அன்னப்பிராசனம் எனப்படும்.

### கர்ணவேதனம் (காது குத்துதல்)



குழந்தை பிறந்து 12ம், 16ம் நாளில் அல்லது 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களில் ஒரு நல்ல நாளில் பொற்கொல்லர் ஒருவர் மூலம் குழந்தைக்குக் காதுகுத்தித் தோடு அணிவிப்பர்.

காதுச்சோணையின் கீழ்ப்புறத்தில் நரம்புகள் சந்திக்கும் இந்த இடம் துளையிடப்படும்போது உடலில் சில நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் என்கின்றனர். அதனால் ஆண், பெண் ஆகிய இருகுழந்தைகளுக்கும் காதுகுத்தும் வழக்கம் இருந்திருக்கிறது.

நவீனகால சீனதேச அக்யூபங்ச்சர் சிகிச்சை முறையுடன் இவ்விடயம் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது.

### வித்தியாரம்பம்



குழந்தைக்கு இரண்டு வயது பூர்த்தியாகி மூன்றாவது வயது நடந்துகொண்டிருக்கும் போது தைப்பூசம் அல்லது விஜயதசமி 'ஆகிய நல்ல நாளில் சுவாமி சந்நிதியில் வைத்துக் குழந்தைக்கு எழுத்துக்களைக் கற்பிக்கத் தொடங்குவர். இதனை வித்தியாரம்பம், ஏடுதுவக்குதல், அட்சராப்பியாசம் ஆகிய பெயர்களால் குறிப்பிடுவர்.

எ. மரணச் சடங்கு

ஓர் ஆன்மா உடல் எடுத்துப் பூவுலகுக்கு வரும் நிகழ்வு எப்படி ஒரு சடங்காகக் கொண்டாடப்படுகிறதோ அதேபோல அந்த ஆன்மா உடலை விட்டுப் பிரிந்துபோகும் நிகழ்வும் சடங்காகக் கொண்டாடப்படுகிறது.

ஆன்மாவும் புனிதமானது. அது வாழ்ந்த வீடாகிய இந்த உடலும் புனிதமானதே. இவற்றைக் கருத்தில் கொண்டு, உடல், உயிர் இரண்டையும் உரிய முறையில் அவற்றுக்குரிய இடங்களுக்கு அனுப்பும் செயற்பாடுகள் மரணச் சடங்குகளில் பொதிந்துள்ளன.

இந்த உடல் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஆனது. எலும்பும் தாதுக்களும் தசையும் பூமியின் அம்சம். இரத்தம் தண்ணீரின் அம்சம். உடலின் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் நமது உடலில் பலவித வாயுக்கள் உலாவுகின்றன. இவை தசவாயுக்கள் என அழைக்கப்படுகின்றன. இவை காற்றின் அம்சம். வயிற்றிலே உணவைச் சமிக்கச் செய்யும் அக்கினி இருக்கிறது. இது ஜடராக்கினி எனப்படும். இது தீயின் அம்சம். இதயத்தினுள்ளே ஒரு வெளியிருக்கிறது. இது ஆகாசத்தின் அம்சம். இது சிதாகாசம் எனப்படும்.

உடலை உருவாக்கித் தந்த பஞ்ச பூதங்களிடம் முறைப்படி அது வழங்கப்பட வேண்டும். அதனால் உடல் சிவஸ்வரூபமாக பாவனை செய்யப்பட்டு அதற்குப் பூஜைகள் நடத்தப்பட்டு உருத்திர கும்பத்தினால் அதற்கு அபிஷேகம் செய்யப்பெற்று சிவாக்கினியிலே அந்த உடல் தகனம் செய்யப்படுகிறது. அவ்வாறு அது எரியும்போது பஞ்சபூதங்களுடன் அது சங்கமமாகிவிடுகிறது.

ஆன்மா உடலைப் பிரிந்தவுடன் அந்தச் சூழலிலேயே தங்கியிருக்கும். அவ்வேளையில் அந்த ஆன்மா பிரேத ரூபத்திலுள்ளதாகவே கருதப்படும். 31ம் நாட் கிரியைகள் வரை பிரேத ரூபத்திலிருக்கும் ஆன்மா அதன்பின் பிதிர்நிலை அடைந்து பிதிர்லோகம் சென்று முன்னோர்களுடன் சேர்ந்துவிடும். அதுவரை அதற்கேற்படும் பசி, தாகங்களைப் போக்கி ஆறுதல்படுத்தி அதன் பிதிர்லோகப் பயணம் சுகமாக அமைவதற்கு மரணக் கிரியைகள் உதவுகின்றன. இவை அந்தியேட்டி சபிண்டீகரணம், கிருகயக்ஞம் என்பன.

பிதிர்லோகம் சார்ந்த பிறகும் அவ்வான்மா தனது கன்ம வினைகளுக்குரிய பாவ புண்ணிய பலன்களை அனுபவித்து மறுபிறவி எய்தி வாழும் நிலை சித்திக்கும்வரை அதற்கு எந்தவித துன்பங்களும் நேரக்கூடாது என்பதற்காக முதலாவதாண்டு முடியும் வரை மாதம் தோறும் மாசிகம் என்ற கிரியையும், வருட இறுதியில் ஆண்டுத் திவசம் (வருஷாப்திகம்) என்ற கிரியையும் பின்னர் ஆண்டுதோறும் திவசம் என்ற கிரியையும் செய்யப்படுகின்றன.

மனித வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை இவ்வாறு இறை வழிபாடுகளுடன் இணைந்த கிரியைகளும், சடங்குகளும் தொடர்வதைக் காணலாம். மரணமும் அதன் பின்னரும் கூடச் சடங்குகள் தொடர்கின்றன. இறப்புக்குப் பிந்திய கிரியைகள்

அபரக் கிரியைகள் எனப்படும். மங்கலமாக நிகழும் ஏனைய கிரியைகள் பூர்வக் கிரியைகள் எனப்படும்.

பிறப்புக்கு முன்னரும், வளரும் குழந்தைப் பருவத்திலும் செய்யப்படும் சடங்குகள் பெற்றோரால் செய்யப்படுகின்றன. இறப்பின் பின்னர் செய்யப்படும் சடங்குகள் பிள்ளைகளால் செய்யப்படுகின்றன.

மூன்று தலைமுறைகள் இங்கு தொடர்புபடுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

பாரம்பரியம், பரம்பரை, மரபு என்பன இந்துக்களின் வாழ்வில் மிகவும் முக்கியத்துவம் பெறுவது தெரிந்ததே. வாழையடி வாழை எனக் கூறப்படும் வழிவழியான அந்தத் தொடர்பு நிலைப்பதற்கும் அவர்களுக்கிடையே பாசமும் பற்றும் வளர்வதற்கும், தலைமுறை இடைவெளி என்னும் இடையீடு தோன்றாமல் பாதுகாக்கவும் இச்சடங்குகள் துணைசெய்கின்றன அல்லவா?

**ஏ. நிறைவுரை**

திருமணச் சடங்கு, மரணச் சடங்கு முதலியவற்றிலே சொல்லப்படுகின்ற பல வேத மந்திரங்கள் மிகுந்த அர்த்த புஷ்டியுடையவை. அவை வடமொழியாகிய சம்ஸ்கிருத மொழியிலிருப்பதால் நம்மில் பலர் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதில்லை.

அவற்றின் உச்சரிப்புக்கள், சப்தங்களினால் ஆற்படும் அதிர்வுகள் சூழலிலும், சம்பந்தப்பட்டவர்களின் உள்ளங்களிலும் சில நல்லதிர்வுகளை ஏற்படுத்தவல்லன.

அதுமட்டுமல்லாமல், அந்த மந்திரங்கள் அக்கிரியைகளில் ஈடுபடும் தனிமனிதனுக்குரியதாக இல்லாமல், பரந்துபட்ட உலக நன்மைகளுக்குரிய வேண்டுதலாவும்கூட அமைந்திருப்பது வியப்புக்குரியது.

மிகப் பழைய காலத்திலிருந்தே இந்துக்கள் பரந்த மனப்பாண்மையுடனும் விரிந்து பரந்த உலக உயிர்கள் அனைத்தையும் தன்னுடன் ஒன்றுசேர்த்துப் பார்க்கின்ற உளப்பாங்குடனும் இருந்து வருகிறார்கள் என்பதை உணர்ந்து நாம் பெருமைப்படலாம்.

## அருஞ்சொற்பொருள்

இல்லம் - வீடு, மனை.

இல்லறம் - மனைவியுடன் இல்லத்திலிருந்து நல்லறங்களைச் செய்து வாழுதல்.

சம்ஸ்காரம் - நன்றாக ஆக்குதல்.

கோசலம் - பசுவின் சிறுநீர்.

கோமயம் - பசுவின் சாணி.

ஆசௌசம் - சுத்தமின்மை, புனிதமற்ற தன்மை.

தரிசித்தல் - பார்த்தல்

வாயு - காற்று.

சிதாகாசம் - சித் + ஆகாசம் - அறிவுவெளி.

ஜடராக்கினி - ஜடரம் - வயிறு, அக்கினி - நெருப்பு.

## வினாக்கள்

1. வழிபாட்டறையில் இருக்க வேண்டிய முக்கியமான மூன்று படங்கள் எவை?
2. பஞ்சகவ்வியம் என்பது என்ன?
3. கர்ணவேதனம் என்றால் என்ன?
4. வித்தியாரம்பம் என்றால் என்ன? அது எத்தனை வயதில் நிகழும்?
5. ஜடராக்கினி என்பது என்ன?

# காலப்பகுப்பு

## பட்சங்கள் இரண்டு

பூர்வ பட்சம் - அமாவாசை முதல் வளர்பிறை பதினைந்து நாட்கள்.

அபரபட்சம் - பௌர்ணமி (பூரணை) முதல் தேய்பிறை பதினைந்து நாட்கள



# சக்திப் பாட்டு

## (ஆரத்திப் பாட்டு)

ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய எனத் தினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீ (ஜெய)

திருப்தியும் இன்பமும் வாழ்விற் துலங்க
தேவையெல்லாம் மறைய - அம்மம்மா
தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிடப் பாடி உருகிட
பணிப்பாய் அன்பில் எமை - ஓம் ஸ்ரீ (ஜெய)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி பலமருள்வாய் - அம்மம்மா
ஈஸ்வரி பலமருள்வாய்
கரம்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையைத் தந்திடுவாய் - ஓம் ஸ்ரீ (ஜெய)

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மம்மா
கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலம் நாம் - ஓம் ஸ்ரீ (ஜெய)

கடமைகள் செய்தே கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து - அம்மம்மா
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்தே ஆரத்தி செய்தோம்
ஞாலத்தில் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீ (ஜெய)



அடுத்த வெளியீடு

# வளரும் சிறுவர்க்கு வாழும் இந்து சமயம்

## பாகம் III

(உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உகந்தது)

*பாடம் 1*

### இந்து சமய வரலாறு

அ. வைதிக சைவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.
சிந்துவெளி நாகரிகம், வேத காலம், உபநிஷதத்தின் தோற்றம், தர்மசாஸ்திரங்கள், இதிஹாச புராணங்கள், பகவத் கீதை ஆகியவற்றின் தொடர்ச்சியான வளர்ச்சிப்போக்கு. ஆகமங்களின் தனித்துவம், தொன்மை, அதன் வழி நூல்கள் வைதிக சைவத்தின் மலர்ச்சி.

ஆ. அவைதிக சமயங்களின் தோற்றமும் இந்து சமயத்தில் அவற்றின் தாக்கமும் மறுமலர்ச்சியும்.

இ. தென்னிந்தியாவில் நமது சமய வரலாறு
சங்க காலம், சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், பிற்பட்ட காலம்.

ஈ. இன்றைய இந்து சமயத்தின் உலகளாவிய நிலை
புலப் பெயர்வுகளுடன் சமயம் தொடர்பான விளக்கம், வளர்ச்சியும் குறைபாடுகளும், உட்கட்டமைப்பில் இருக்கும் அடிப்படைப் பலவீனங்களும் புறத்தாக்கங்களும், மத மாற்றங்கள்.

*பாடம் 2*

### இந்து சமய நூல்கள்

வேதம், உபநிடதம், தர்மசாஸ்திரம், இதிகாச புராணங்கள், ஆகமங்கள், தமிழ்ப் புராணங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், பிற்காலத் தோத்திர நூல்கள், திருக்குறள் முதலியன. இவை பற்றிய தனித்தனியான சுருக்கமான விளக்கக் குறிப்புக்கள்.

*பாடம் 3*

### இந்துசமயத் தெய்வங்கள்

உருவ வழிபாடு பற்றிய அடிப்படை விளக்கம், புராண – ஆகம அடிப்படையில் விக்கிரகங்களின் தோற்றமும் வளர்ச்சியும்.
தெய்வ மூர்த்தங்கள் - பல்வேறு தெய்வத் திருவுருவங்களின் தோற்றப் பொலிவு விளக்கங்களும் அவற்றின் தத்துவ உட்பொருள் விளக்கங்களும்.

*பாடம் 4*

## சமயப் பெரியார்கள்

வேதகால முனிவர்கள், வியாசர், வான்மீகி முனிவர், சங்கப் புலவர்கள், திருவள்ளுவர், நாயன்மார்கள், சேக்கிழார், கச்சியப்பர், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ரமணர், அரவிந்தர், தாயுமான சுவாமிகள், ஆறுமுகநாவலர், இராமலிங்க வள்ளலார் முதலிய பெரியார்கள் பற்றித் தனித்தனியே சுருக்கமான வரலாற்றுக் குறிப்புக்களும் பணிகளும்

*பாடம் 5*

## விரதங்கள்

விரதங்கள் பற்றிய அடிப்படை விளக்கம், நோக்கம், அனுட்டிக்கும்முறை, விரதங்களின் வகைகள்.

நித்திய விரதங்கள், வார, மாத, வருட விரதங்கள்.

நட்சத்திர, திதி, வார விரதங்கள்.

சிவ விரதங்கள், சக்தி விரதங்கள், விநாயக விரதங்கள், கந்த விரதங்கள், விஷ்ணு விரதங்கள், ஏனைய விரதங்கள்.

*பாடம் 6*


## இந்து சமயத் தத்துவங்கள்

அவைதிக தரிசனங்கள், வேதாந்தம், சைவசித்தாந்தம்

*பாடம் 7*

## பிற சமயங்கள்

கிறிஸ்தவ இஸ்லாமிய சமயங்கள் பற்றிய அறிமுகக் குறிப்புக்கள்.





ஓம்.
சச்சிதானந்தப் பரம்பொருளே,
அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும்
நாங்கள் செய்த சகல குற்றங்களையும்
பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும்.
ஓம்.



திருச்சிற்றம்பலம்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையம் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் தொழாப் பிழையும் துதியாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே

திருச்சிற்றம்பலம்

***இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!***
***அன்பே சிவம்***




கணினி வடிவமைப்பு
ஸ்ரீவித்யா கணினி அச்சகம்
இணுவில்.
021 222 6004

அச்சுப் பதிவு
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில்.
021 222 6722